14. Prof. S. Yogarajah

# புதுத்தளிர் நூறு



## இளந்தலைமுறைக் கவிஞர்களின்

## ஆக்கங்கள் நூறு

# புதுத்துளிர் நூறு

இளந்தலைமுறைக் கவிஞர்களின்
ஆக்கங்கள் 100

தொகுப்பாளர்கள்
கலாநிதி. செ. யோகராசா
கவிஞர். சு. வில்வரெத்தினம்,
நந்தினிசேவியர்
முல்லைக்கோணேஸ்

வெளியீடு:
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை
இளைஞர் விவகார அமைச்சு
வடக்கு கிழக்கு மாகாணம்

# நூல் விபரப் பட்டியல்


| | | |
|---|---|---|
| நூல் | :- | புதுத்துளிர் நூறு |
| விடயம் | :- | கவிதைத் தொகுப்பு |
| பதிப்பு | :- | செப்ரெம்பர் 2004 |
| பக்கங்கள் | :- | 112 |
| பிரதிகள் | :- | 500 |
| அளவு | :- | A5 |
| வெளியீடு | :- | பண்பாட்டலுவல்கள் திணைக்களம்<br>கல்வி பண்பாட்டலுவல்கள்,<br>விளையாட்டுத்துறை,<br>இளைஞர் விவகார அமைச்சு<br>வடக்கு கிழக்கு மாகாணம்<br>திருக்கோணமலை. |
| அச்சுப்பதிப்பு | :- | றெயின்போ மினிலாப்<br>361, நீதிமன்ற வீதி,<br>திருக்கோணமலை.<br>026-2223454, 0777-303938 |

# முன்னுரை

எமது கல்விப் பாரம்பரியம் மரபுசார் கல்விமுறையினின்றும் மாறுபட்டு மாணவருள் மறைந்திருக்கும் பல்வகை ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து, ஆற்றுப்படுத்தும் முறையாகவும் அமையவேண்டும். படைப்பாற்றல் என்பது ஆளுக்காள் மாறுபட்டு அமைந்திருக்கும். இளநாற்றுப்பருவத்திலும் துளிர்விடும். இளவயது அநுபவத்தை மீளவும் பின் நோக்கிப் பார்க்கும் நடுவயதுக்கூறிலும் ஆரம்பமாகும். ஆனால் ஏதோ ஒரு துறையிலேனும் படைப்பாற்றல் என்பது முளைவிடாதார் இல்லை. அந்த ஆற்றலை இளம் பருவத்தினரிடையே தூண்டித் துலங்கச் செய்தல் அறிவறிந்தோர், படைப்பாற்றல் உடையோர், திறனாய்வாளர் கடன். அத்தகையோரைப் பயன்படுத்தி, தொடர்பயிற்சி அளித்து மாணவரைத் தேர்ந்தெடுத்து அவர்களை செலுமைப்படுத்தல் எமது பண்பாட்டுத் திணைக்களத்தின் பணிகளுட் சிறந்தது.

ஆற்றுவதற்கு அனந்தம் இருக்கின்றது. ஆற்றல் உடையோரை கண்டுபிடித்து, ஆற்றல் இலக்கியத் திறனை அபிவிருத்தி செய்தால் அனந்தமாக இருக்கின்ற பணிகளை ஆற்றுவதற்குரியவர்களை நாம் உருவாக்கி விடுவோம். இளந்தலைமுறையினராகிய மாணவர்களில் இருக்கும் நல்லநாற்றுகளின் வீரியத்தை, முளைத்திறனை இனங்காணும் ஆக்க இலக்கியச் செயலமர்வுகளின்போது பெற்ற கவிதைகளின் அறுவடைகளின் தொகுப்பு இங்கு நாலுருப்பெற்று வெளிவருகிறது. '**புதுத் துளிர் நூறு**' என்ற பெயரில் வெளிவரும் இந்தக் கவிதை இளந் துளிர்கள் அகநானூறு, புறநானூறு எனத்தொடங்கி வளர்ந்த வளம் மிக்க கவிதை மரபின் பாத்திகளில் நிகழும் புதுநடுகைகள் ஆகும். அல்லது பாரம்பரிய வேரோட்டத்தின் செழுங்கிளைகள் ஈனும் புதிய விழுதுகள் என்றும் கூறலாம். இவை எமது புதிய வளர்ச்சிகளின் பாரிய பந்தலைத் தாங்கி நின்று தாமும் பூத்துப் படரும் உயிர்த் தூண்களாக நிமிர வேண்டும். அந்த நிமிர்வை இந்தத் தொகுப்பின் ஊடாக நான் தரிசிக்கின்றேன்.

பாடசாலை மாணவர்களின் ஆக்க இலக்கியத்திறன் விருத்திச் செயலமர்வுகளின் பெறு பேறான கன்னி முயற்சி மேலும் செயலமர்வுகளின் ஊடான தொடர் பேறுகளும் தொகுப்புகளாக வெளிவரும் என்பதற்கான கட்டியம் கூறலாக இது அமைகிறது.

ஆனால் எதிர்காலத்தில் கவிதைகள் மட்டும் என்றில்லாமல், சிறுகதைகள், குறுநாடகங்கள் என விரிவு பெற்று ஆற்றல் துலங்கும் படைப்புகள் வெளிக்கொணரப்பட்டு தொகுப்பாக வேண்டும். அவை பாடசாலை மாணவர்கள் வட்டத்திலும், வெளிவட்டங்களிலும் பரவலாகி, வாசிப்புச்சூழல், படைப்பாக்கச்சூழல் என்பவற்றை அகலிக்கத் துணையாக வேண்டும் என்பதே எனது அவா. இக்கன்னி முயற்சித் தொகுப்பிற்கும், இத்தொகுப்பு அறுவடையாவதற்கான செயலமர் வுகளிற்கும் காரணமாய் நின்ற செயலமர்வாளர், தொகுப்பாளர், பண்பாட்டுத் திணைக்களத்தினர் அனைவருக்கும் எனது நன்றி கலந்த பாராட்டுகள் உரித்தாகட்டும்.

திரு. ஆர். தியாகலிங்கம்
செயலாளர்
கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு
வடக்கு கிழக்கு மாகாணம்

# வெளியீட்டுரை

எமது பண்பாட்டுத் திணைக்களம் பல்வேறு நூல்களை வெளியிட்டிருக்கிறது. தமிழ் இலக்கிய விழாக் கருத்தரங்குத் தொடர்களின் கட்டுரைகள் தொடக்கம், விபுலானந்தர் நூல் வரிசைகள் வரை பல நூல்கள் வெளி வந்திருக்கின்றன. ஆனால் இந்தப் '**புதுத்துளிர் நூறு**' அந்த வரிசையினின்றும் வித்தியாசமானது மட்டுமல்ல புதிய படைப்பாளிகளின் ஆக்கத்திறனை வெளிக்கொணரும் வகையிலானது. ஆக்க இலக்கியத்திறன் விருத்திச் செயலமர்வுகளின் அறுவடையை நிரூபித்து நிற்பது. ஆகவே புதிய இளம் படைப்பாளிகளை ஆண், பெண் இருபாலாரிலும் இருந்து கணிசமான அளவு உருவாக்கி இருக்கின்றோம் என எமது பணியையிட்டு பூரிப்பு அடையச் செய்கிறது.

ஆண்டுதோறும், பலமாவட்டங்களில் ஆக்க இலக்கியத்திறன் விருத்திச் செயலமர்வுகளை, பாடசாலை மாணவர்களுக்காக, நாம் தக்க பேராளர்களைக் கொண்டு நடத்தி வருகிறோம். அதற்குக் குறித்த பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் ஒத்துழைப்புத் தந்து மாணவர்களை பங்கு பற்றச் செய்து வருகிறார்கள். அவ்வாறான செயலமர்வுகளில் பங்கு பற்றியதற்கான பலாபலன்களைத் தாம் எய்தியிருக்கிறோம் என அவர்கள் நிறைவு கொள்ள இந்த நூறு கவிதைகளின் நூல் வடிவம் தக்க சான்றாக நின்றுதவும். நமது செயலமர்வுகளின் பலா பலனை எண்ணி நாம் பெருமை கொள்ளவும் உதவும். ஆனால், பெருமை கொள்வது நம் மட்டுமல்ல, வளர்ந்து வரும் இளைய பரம்பரையும், எமது கலை இலக்கிய உலகமும் தான் என்பதில் மறு பேச்சுக்கு இடம் இருக்காது என நம்புகிறோம்.

இந்த அறுவடையை நாம் எய்துவதற்கு துணை நின்ற கலாநிதி செ.யோகராசா, முல்லைக்கோணேஸ் உள்ளிட்ட பலருக்கும், எமது திணைக்கள அலுவலர்களுக்கும், கலந்து கொண்டு செயலமர்வுகளை ஆக்கபூர்வமானதாக்கிய மாணவ, மாணவிகளுக்கும். எமது கல்வியமைச்சின் செயலாளருக்கும், இந்நூலை அழகுற வெளிக் கொணர்ந்த றெயின்போ அச்சகத்தாருக்கும் எமது திணைக்களத்தின் சார்பில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

நன்றி

**திருமதி. என். ஸ்ரீதேவி**
**உதவிக் கல்விப்பணிப்பாளர்.**

# தொகுப்பாளர் உரை

பண்பாட்டலுவல்கள் திணைக்களம் (வ.கி.மா) பாடசாலை மாணவர்களுக்கான ஆக்க இலக்கியத் திறன் விருத்திச் செயலமர்வுகளை நடத்தி வருகிறது. 2002ல் வன்னி மாவட்டமும் முல்லைத்தீவு மாவட்டமும் இணைந்த செயலமர்வு மூன்று நாட்கள் தொடர்ச்சியாக நடத்தப்பெற்றது. அதனையடுத்து 2004ல் திருகோணமலை மாவட்டத்தில் நடைபெற்றது. 2003ல் தேசிய சாகித்திய விழாவிற்கான கவிதை, சிறுகதைப்போட்டிகளும் மாணவர்களுக்காக நடாத்தப்பட்டது. இந்தச் செயலமர்வுகளிலும், போட்டியிலும் கலந்து கொண்டவர்களின் கவிதைகள் இங்கு தொகுக்கப்பெற்று புதுத்துளிர் நூறு என்ற தலைப்பில் நூலாக வெளிவருகின்றன. இத்தகையதொரு செயலமர்வுகளின் அறுவடைகள் தொகுப்பாக நூலுருப் பெறுவது இதுவே முதன் முறையென்று நாம் கருதுகிறோம். இத்தகைய செயலமர்வுகளை ஒழுங்கு செய்த பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளரையும் சகல ஒத்துழைப்பையும் வழங்கிய கல்வி அமைச்சின் செயலாளரையும் நாம் முதற்கண் பாராட்டுகின்றோம். இச்செயலமர்வுகள் போட்டிகள் மூலம் துடிப்பானதொரு எதிர்காலச் சந்ததி இனங்காணப்பட்டுள்ளது, என்று நாம் கருதுகின்றோம்!

இச்செயலமர்விலே கவிதையும், சிறுகதையும் எழுதுவதற்கான 3 நாள் பயிற்சிகள் வழங்கப்பட்டன. குறுகிய காலத்துள் இக்கடின பணியினைச் செய்ய இயலாது என்பதனை நாமறிவோம். திட்டமிட்டுச் செயற்பட்டோம். விரிவுரைகளை நிகழ்த்தவோ அநுபவக் குவியல்களை அதிகம் வெளிப்படுத்தவோ முற்படாது தேர்ந்தெடுத்த சிறந்த படைப்புகளை வாசிக்கச் செய்தோம். ஓரளவாவது படைப்பு உலகினுள் நுழையச் செய்தோம். விளைவாக இளங்கவிஞர்கள் பலரை இனங்கண்டு கொண்டோம். பேருவகை எய்தினோம்.

இவர்களது கவிதைகளிலே நூறு கவிதைகளைத் தெரிவுசெய்த ஒரு தொகுப்பாக்கினோம். இந்தக் கவிதைகள் எமது சிறுச்சிறு

திருத்தங்களுக்குட்படுத்தப்பட்டு ஒழுங்கு படுத்தப்பட்டன. ஆயினும் இவற்றின் முழுச் சொந்தக்காரர்கள் இந்த இளங்கவிஞர்களே தான். யுத்தகாலம் அதன் கொடுமைகள், பக்க விளைவுகள், சமாதானத்தின் தேவை என்பன பற்றியே பல கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. ஆயினும், இளவயதுக்கனவுகள், ஏக்கங்கள், கல்வி, புதிய கல்விச் சீர்த்திருத்தம், தாய்மை, தோழமை, முதுமை, பெண் விடுதலை எனப் பல இவர்களது கவிதைகளின் பாடு பொருள்களாயமைந்துள்ளன. எனவே இந்தத் தொகுப்பு பல்விதச் சுவை பொதிந்தனவாயமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதே வேளையில் எமது சிறுகதைச் செயலமர்வு எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை. சிறுகதையின் இயல்புகள் கவிதையிலிருந்து வேறுபட்டுள்ளமை, சிறந்த சிறுகதைகள் வாசிக்கும் வாய்ப்புக்கிட்டாமை, நூலகங்களுக்கு குறிப்பாக தொண்ணூறுகளின் பின்பு தரமான நூல்கள் சென்று சேராமை, மாணவர்களது வாசிப்பு ஆர்வம் குன்றியுள்ளமை, அனைத்தையும் விட மாணவர்களான தம் பிள்ளைகளின் ஆக்க இலக்கியத்திறன் விருத்திக்குப் பெற்றோரே தடையாகின்றமை ஆசிரியர்களின் தூண்டலின்மை முதலான விடயங்கள் அதற்கான காரணங்களாகின்றமை என்று நாம் உணர்ந்து கொண்டோம். எனவே இவை பற்றி இனியாவது இவற்றிற்குப் பொறுப்பானவர்கள் சிந்தித்துச் செயற்படுவது அவசியமென்று இவ்விடத்தில் வற்புறுத்த விரும்புகின்றோம்.

இத்திணைக்களத்தினை இவ்வரிய ஆக்கபூர்வமான காலத்தின் தேவையொன்றினைப் பூர்த்தி செய்த பணிக்காக மறுபடி பாராட்டுவதோடு, தொடர்ந்தும் இப்பணியில் ஈடுபடுமாறு விநயமாகக் கேட்டுக் கொள்கிறோம்.

**கலாநிதி. செ. யோகராசா**
**கவிஞர். சு. வில்வரெத்தினம்**
**(தொகுப்பாளர் சார்பில்)**

# காலம் கனியும்

என்னைப் பெற்றெடுத்த பூமியே
நான் தவழ்ந்து தலை நிமிர்த்த
ஆதாரமாகிய தாய் மண்ணே
தூய கலைகளின் உறைவிடமே!
உன்னை விட்டு வந்த வேதனையில்
நிதமும் செத்துத்துடிக்கிறேன்.
வசந்தமிழந்த குயிலாக வாடுகிறேன்.
கல்வியும், கலையும், காதலும், வீரமும்
வாழையும் மரவள்ளியும், வெங்காயமும்,
முந்திரிகையும், புகையிலையும்
விளைந்த உன் மடியிலே இப்போது
பசிய இறகொடிந்த மரங்களும்
இடிந்து பாழடைந்த கட்டடங்களும்
குழிவிழுந்த வீதிகளுமாய்
எழில் குலைந்து ஈனப்பட்டு
எல்லாம் சிதைந்து போயினவே
ஆனாலும் காத்திரு
காலம் கனிந்து வரும்
புலரும் புதுயுகம்

**ஞா. அன்ரன் வினோத்**
மு/றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன்
பாடசாலை
முல்லைத்தீவு.

# விடிகாலை

அமைதியின் அழகு
எழிலார்ந்த எம்மூரின் இயற்கையில்
படிகிறது
காற்று மெல்லலைகளாக வீசிக்கொண்டிருக்க
அவ்வலைகளிலே மரங்கள் அசைந்து நடனமாட
சிட்டுக் குருவிகள் சிறகடித்துப் பறக்க
அவற்றின் கீதம் எம்மைக் கண் விழிக்கச்சொல்கிறது
கடலலைகள் வாவென்று கைகாட்டி அழைக்க
சேவல்கள் சிறகடித்துக் கூவ
மலர்கள் இதழ் விரிந்து எம்மை
வாசனை வீசி வரவேற்கிறது
கதிரோன் இளம் பொன் கதிர்களை வீச
கண் மலர்ந்தேன் நான்
எனது பார்வை அவைகளின் பக்கம்
அவைகளின் பார்வை விடிவின் பக்கம்

**செ.ஜான்சி**
மு/கலைமகள் வித்தியாலயம்
முள்ளியவளை
முல்லைத்தீவு

# முல்லை நிலம்

முல்லை நிலம் எங்கள் முத்து நிலம்
முல்லைக்கடல் சூழ்ந்த நிலம்
மல்லிகை வாசம் வீசும் நிலம்
மங்கையர் மனது கவர்ந்த நிலம்

நல்ல வித்து முளைக்கும் நிலம்
நல் லுழவர் விரும்பும் நிலம்
ஏரால் உழுது ஏத்தும் நிலம்
ஏராளம் விளைச்சல் காணும் நிலம்

வன்னியர் வீரம் விளைந்த நிலம்
வந்தோரை ஆதரித்தேத்தும் நிலம்
கற்புத் தெய்வம் உள்ள நிலம்
கல்வி ஊற் றெடுக்கும் நிலம்

பண்டார வன்னியன் ஆண்ட நிலம்
பாதுகாப்பு அரணான நிலம்
காட்டு மரங்களடர்ந்த நிலம்
எங்கள் காதல் நிலம் தமிழ் வீர நிலம்

செ. ஜான்சி
மு/கலைமகள் வித்தியாலயம்
முள்ளியவளை
முல்லைத்தீவு.

# சமாதானம்

ஒற்றை நடைப் பாதையிலே நடந்து களைத்து
ஒத்திருந்து கண்கள் விழித்து
சமாதானத்தை வேண்டி நிற்கிறோம்.

சூரியன் உதித்தவுடன் மலரும் பூப்போல
நாம் இருக்கவில்லையே என்ற ஏக்கம்
சமாதானம் வந்தால் பூப்போல நாமும் பூப்போம்.

ஓ! மனிதா உலகுக்காக
உன் உயிரைக் கொடு
அப்போது தான் சமாதானம் வரும்

வணிக நிலையமல்ல இந்த நிலம்
கடவுள் தந்த வளம் நிறைந்த பூமி
இன்று
சமாதானத்தை வேண்டி நிற்கிறது.

பூங்குழலின் இனிமையான ஓசையில்
மயங்கிடும் மனிதர்கள் - அதனை
சமாதானம் என நினைக்கிறார்கள்.

வாழ்க்கைக் கடலின் ஓரத்திலிருந்து
வாழ்வை நுகர எண்ணாது
வாழ்வு முழுசாய் வளம் பெறுதலே
வற்றாத சமாதானம் ஆகும்.

**த. குகசாந்தினி**
தரம் - *8A*
மு/றோ.க.த.க பாடசாலை
முல்லைத்தீவு

# மாமரம்

மாமரமே மாமரமே
வசந்த காலத்துளிர்களுடன்
அசைந்து ஆடும் மாமரமே

இயற்கை தந்த கொடை நீயே
இறைவனின் கனி மரமே
பூத்துப்பூத்துக் குலுங்குகிறாய்
பிஞ்சுகள் அள்ளிச் சொரிகின்றாய்
பூவிலிருந்து பிஞ்சாகி
பிஞ்சுகள் காய்த்துக் கனியாகும்
கனியை ருசித்து அருந்துகிறோம்
கனிதரும் மரமே வாழியவே

மென்மைக் காற்று வீசுகையில்
சோ என மெல்லொலி எழுகிறது
உன் கிளைகளின் இலைகள்
பறவைகளின் சிறகுகள் போல
ஆடியே அசைகிறது.

பாட்டனார் நட்ட மாமரமே
பாட்டன் இறந்து போனாலும்
அவனின் அன்பைச் சுமந்து
அருங்கனியாக்கித் தருகின்றாய்
உன் பட்டுத் துளிர்களில் காற்று
ஒற்றுதல் போல்
பல நாளும் அன்பு செய்வோமே.

**இ. பானுரேகா**
தரம் - 6
மு/கள்ளப்பாடு அ/த/க/பாடசாலை.
முல்லைத்தீவு

# உயிரோடு எரியும் உயிரொன்று.....!

அதோ அந்தக் கல்லறையுள்
என் வாழ்க்கையை
துணைக் கழைத்துக்கொண்டு
அவன் தூங்குகிறான்..!

எனது கண்ணீர் அஞ்சலி
அவனில் உயிர் தெளித்து
எழுப்பி விடப் போவதில்லை
எனது கவிதாஞ்சலி
அவனை சென்றடையப்போவதில்லை
என்பது தெரிந்திருந்தும்
என் மன ரணங்களை மறப்பதற்காகவே
எழுதுகிறேன்!

உறக்கத்தைப் போல
அவனுக்கு
நிம்மதியைக் கொடுத்த சாவு
என் உலகில்
எல்லாச் சஞ்சலங்களும்
பொதுவாய் போனது!

எனது உயிர்
அவனோடு புதையுண்டு போக
அவனது சடலமாய் - நான்
தினம் தோறும் இங்கே
தீ மூட்டப்படுகிறேன் !

நான் கதற கதற
அவன்
தந்து போன துயரமிது.....
எங்ஙனம் இதை நான் தாங்க?

எந்நாள் வரை நான்
அணுவணுவாய்ச் சாக..?
எனது உயிர் கொண்டு
அவனது கல்லறை தோண்டப்பட்டது
எனது கண்ணீரின் ஈரத்தால்
அவன் கல்லறை கட்டப்பட்டது
எனது கனவுகளால்
அவன் கல்லறை மூடப்பட்டது
எனது ஆத்மாவால்
அந்தக்கல்லறைக்கு
வர்ணம் பூசப்பட்டது..!

இத்தனையும்
என்னிடமிருந்து
பறித்துக்கொண்டு போனது
போதாதென்றா - எனது
நிம்மதியையும் வாங்கிப் போனான்

அந்த திருவிழாத் தினத்தை
அவன் மரணத்திற்காகத்
தேர்ந்தெடுத்துக் கொண்ட பின்னர்..!
எந்தத் திருவிழாவும்
இவ்வுலகில் எனக்கு
இல்லாமற் போனது...!

இத்தனை குரூரமானதா அன்பு
மலர் போன்று வந்து
நெருப்பு வேலிகளால்
நெஞ்சத்தை தொடுவதா அன்பு
அவஸ்த்தை தரும் வினாக்களோடு
அவன் கல்லறையைப் பார்க்கின்றேன்...!

**ந. நர்மதா**
2004 உ/த
கலைப்பிரிவு
மு/முல்லைத்தீவு ம.வி.
முல்லைத்தீவு

# காற்றிற்கோர் செய்தி

காற்றே உனக்கோர் சேதி விடுக்கிறேன்
கனிந்த உனது இதயத்தில்
எடுத்துச் சென்று எட்டுத் திசைகட்கும் ஓது
காற்றே உனக்கோர் சேதி விடுக்கிறேன்.

நாங்கள் பட்ட வேதனைகளை
தாங்க முடியாத துயரங்களை
வீங்கிப் புடைத்த விம்மல்களை
சுமந்து சொல்லுமாறு உன்னைநான்
பணிக்கவில்லை
தூங்காத எங்கள் துணிவுடைமையை
சுதந்திரத்திற்கான எம் மூச்சுகளை
எடுத்துச் செல்வாயாக.

அரக்கர் கோட்டைகள் பொடியாய் போக
அங்கே நாங்கள் எழுதிய சரித்திரம்
இனிய தென்றலாகி சமாதானத்திற்கும்
இடுகின்ற உரமாய் மாற்றி எழுதுவோம்
எல்லாம் எங்கள் ஆன்ம பலத்தினால் இயன்றது
மேலும் இயலுமெனச் சாற்றுக காற்றே

எதிராய் எதுவும் எழுமாகில்
இடி மின்னலாகி வருவோம் நாம்
தென்றல் புயலாய் மாற்றமுறும்
திசைகள் யாவும் நம் வசமாகும்
விசை கொள்வோம் எனினும் விடுதலை
அமைதியே வேண்டும் சொல் காற்றே

ந. நர்மதா
2004 உ.த
கலைப்பிரிவு
மு/முல்லைத்தீவு ம.வி
முல்லைத்தீவு

# நெஞ்சை உழும் நினைவு

நாதியற்றோம்
நாடிழந்தோம்
முகவரியிழந்தோம்
அன்னை மண்ணில்
அகதிகள் ஆனோம்.

வறுமையின் கொடுமையினால்
வயிற்றுப் பசி போக்குதற்காய்
அடுத்தவன் கை எதிர்பார்த்து
இரந்து திரிவதற்காகவா
இந்தக் கால்கள்?
ஏந்துவதற்கா கைகள்?

துயர் மிகுந்தோம்
மலேரியாப் பிணி வருத்த
உடல் மெலிந்தோம்
நோயோடு மாரடிப்பதற்கா உடலெடுத்தோம்
மண்டியிட்டுக் கிடப்பதற்கா உயிர் வாழ்வு?

நாதியற்றோம்
நாடிழந்தோம்
முகவரியிழந்தோம்
அன்னை மண்ணில்
அகதிகள் ஆனோம்.

ஆனாலும், ஆனாலும்
எழுந்து நிற்க ஏதோ என்
நெஞ்சை உழும்
சொந்த மண்ணில் ஏர் நடத்தி
சுதந்திரத்தை விதையென்று
நெஞ்சை உழும் ஓர் நினைவு.

மு. தீபா
தரம் - 10
மு/கொக்குத்தொடுவாய்
நீராவிப்பிட்டி, முள்ளியவளை
முல்லைத்தீவு

# இயற்கை

இயற்கை எனும் பேரழகு
இன்ப அமுதாய் ஊறுதடி
காடு மேடு எல்லாமும்
காணும் போது மலர்ச்சியடி

ஓங்கிவளர் தென்னஞ்சோலை
ஒய்யாரக்கூந்தல் கீற்றோலை
தூங்கி நிலவில் ஆடுகையில்
தோகை மயிலாய் தோணுதடி

காற்றுடன் காற்று உரசுதடி
கலகலக்குது குருவிக்கூட்டமடி
பூட்டவிழ்ந்த மனசும் காற்றாகி
பூமி முழுதையும் தழுவுதடி

பூமியை நனைக்கும் மழைத்துளிகள்
பூவின் இதழ்களில் பட்டுரசும்
மேவியெழுகின்ற உணர்வலைமேல்
மிதக்கும் மனமோ தோணியடி

இயற்கை என்னும் பேரழகில்
எதனை விடுவது ரசிப்பதுவோ
இவளவும் எப்படிப் பாடுவது
இயற்கை அழகே நீயே சொல்

**த. நிசாந்தினி**
தரம் - 8A
மு/றோ/க/த/க/ பாடசாலை
முல்லைத்தீவு

# ஈரம் கொள்

முதியோரை
ஏளனம் பண்ணும் இளையோனே
சற்று எண்ணிப்பார்

பழமென்றும் கிழமென்றும்
பகிடி பண்ணுகிறாய்
நைன்ரி என்று நக்கலடிக்கிறாய்
இளமை என்றும் இருப்பதல்ல உன்னோடும்
தலை நரைக்கும் போதில்
முதுகிழமாவாய் நீயும்

வயோதிபத்திலும்
வாழ்வு நரைக்காத இளமைக்காலம்
வற்றாத ஆறாக ஓடிக்கொண்டிருக்கலாம் அவருள்ளும்
வழங்கச் சொல்லிக்கொள்
உன் வாழ்வு செழிக்கும்

நீவி எடுக்கும் வெற்றிலை நரம்புகளாய்
அவர்கள் நினைவுகளில் பளிச்சிடும்
வற்றா உழைப்பின் நீரோட்டம்
வாய்க்கால் கிழித்தே
வாங்கிக் கொள் நீயும்
உழைப்பின் வளம் பெறுவாய்

அன்பாய், பண்பாய், பிள்ளைகளாய்
ஆதரவை வழங்கு அவர்களுக்கு
தள்ளாடும் வயதிற்கு ஊன்று தடியாய்
நிற்க முடிந்தால் நில்
உன் வாழ்வும் நிமிரும்
நெஞ்சில் ஈரம் கொள்.

**ப. தமிழினி**
தரம் - 10
மு/கலைமகள் வித்தியாலயம்
முள்ளியவளை.
முல்லைத்தீவு

# சோதி நட்சத்திரங்கள்

இரவில் வான வெளியினிலே
எரியும் வெள்ளி தீபங்களோ
சொரியும் வெள்ளைப்பூக்களோ
சுவர்ண நட்சத்திரங்களோ

வானகத்தாயின் ஒளிவிழிகள்
பூமியை நோக்கிச் சொரிகின்ற
ஆனந்தக் கண்ணீர்த் துளிகளோ
தேனொத்தினிக்கும் புன்னகைகளோ

இயற்கையின் அழகு எங்கெங்கும்
எழுந்து வானகப்பந்தலிலே
அழகழகாப் பூத்தனவோ
அந்த வானம் தந்த பூவனமோ

வானகமென்னும் கோயிலிலே
வடிவழகுச் சுட்டி விளக்குகளே
சோதி மயமான அமைதியின்
சுகத்தை பூமிக்குத் தாருங்களே

**தே.றொபோஜினி**
மு/றோ/க/த/க/ பாடசாலை
முல்லைத்தீவு

# மல்லிகையே வாழி

பூமிதான் வாசம் வீசியதா
பூந்தென்றலின் வாசமிதா
தேனருந்திச் செல்லும் தேனீக்கள்
தென்றலில் பூசும் வாசனையா?
நடுங்கும் இடி குகை வான் பிளந்து
நட்சத்திர வாசம் வீசியதா?

காட்டுப் பறவைகள் பூக்களை கோதி
காதல் செய்யும் நறுமணமா?
சோலைக்குயில்கள் சோகத்தில்
குமைக்கும் சுருதி வாசனையா?

இனியும் பொறுக்க இயலாமல்
எழும்பி வெளியில் வந்தாலோ
கொத்துக் கொத்தாய் நட்சத்திரங்கள்
பூத்தாற் போலக் கார்கால
அந்திக் கருக்கலின் மல்லிகைகள்
அடடா அழகாய் மலர்ந்திருக்கும்
புவியில் வானம் பூத்தாற் போல்
புன்னகை வாசம் பரந்தனவே

வீசுக மல்லிகை நறுமணமே
எமக்கு மட்டுமென்றில்லாமல்
சூழல் முழுதும் சுகந்த மணம்
தேனீ வண்டு சிட்டுகளும்
கூடி முகர வீசுகிறாய்
தேசம் முழுவதும் அமைதி மணத்
தென்றலாகி வீசாயோ

தே. றொபோஜினி
மு/றோ/க/த/க/ பாடசாலை
முல்லைத்தீவு

# முற்றுப்புள்ளி கூடாது

படிக்க விரும்பினால்
பாடசாலை போகத்தான் வேண்டும்
நடிக்க விரும்பினால்
நாடகமேடை ஏறத்தான் வேண்டும்
உணவை விரும்பினால்
உழைப்பை நாடத்தான் வேண்டும்
உண்மையை விரும்பினால்
பொய்மையை அகற்றவே வேண்டும்.
அன்பை விரும்பினால்
அகந்தையை நீக்க வேண்டும்
கல்வியை விரும்பினால்
கற்றுக் கொண்டே இருக்க வேண்டும்
பள்ளிப் படிப்பிற்கு அப்பாலும்
பல்கலைக்கழகம் போனபின்னாலும்
கற்றல் நிற்கக் கூடாது
முற்றுப் புள்ளி கூடாது.

**ர. அபிலாஷா**
மு/றோ/க/த/க/ பாடசாலை
முல்லைத்தீவு

# அழகு

புல் மெத்தை விரித்து வைத்த
பூஞ்சோலைக் கிராமம்
வான்நிலா தன்னழகை
பாலாய்ச் சொரிந்து கொண்டிருந்தது.

ஆங்கே ஒரு புறத்தில்
குடிசை ஒன்று
அழகமைந்த இளம் பெண்
வாரி முடித்த கூந்தல்
மொட்டெனக் குவிந்த கையால்
பொட்டிட்டு நிமிர்ந்தவளின்
பார்வை பட்டுத் தெறிக்க
வெட்கப்பட்டது போல்
விலகிற்று ஒரு மலர்ச்செடி

வாசற்படியில் அவள் குழந்தை
மழலை மொழி சிந்தி
கிங்கிணிச் சதங்கைகளோடு
தவழ்ந்து வருகிறது

வாசல் தேடி வந்ததோர் புது
வாழ்வென்பது போல்
வெள்ளைப் புறா சிறகை விரித்திறங்கி
மெள்ள நடந்தது முற்றத்தில்

இதுகாறும் பட்ட தொல்லைகள்
எல்லாம் போயிற்றென்பது போல்
என்னை மறந்து இலயித்தேன்
அவையவை தம்தம் இயல்பில்
தத் தம் அலுவல்கள் முயன்றபடி

**கு.ஹம்ஷாய்னி**
மு/கலைமகள் வித்தியாலயம்
முள்ளியவளை
முல்லைத்தீவு

# சூரியக் குஞ்சுகள்

சிட்டுக்குருவிகளாய்
சிறகடிக்கும் சிறுவர்களே
சிந்தையில் நீங்கள் தீட்டுவதென்ன

உங்களுக்காக ஓர் உத்தம பணிதான்
உலகோர் கூடி ஒப்படைத்துள்ளார்.

குதித்துத் திரியும் குட்டிகளே
குட்டிச் சுட்டி விளக்குகளே
எட்டி நடந்து எங்கே போகின்றீர்

உதிக்குஞ்சூரியன் உங்களுக்குத்தான்
எதிர் கொண்டழைத்து வாழ்வைத்
துலக்குங்கள் சூரியக் குஞ்சுகளே.

**யோ. மேரி விஜியந்தி**
மு/றோ.க.த.க. பாடசாலை.
முல்லைத்தீவு

# தாழம் பூவின் சோகம்

தாழ்பூவே தாழம் பூவே
ஈசன் பாதம் விட்டு ஏன் வந்தாய்
ஈசன் காலடி தழுவாமல்
கீழிறங்கிப் போனதும் ஏன்?

பூவே உனக்கும் மன்னிப்பில்லையா?
புரிந்த தவறிற்கு விமோசனம் இல்லையா?
பாடுவதற்குனை யாரும் இல்லையா?
பரமன் சாபத்தினால் கீழிறங்கி விட்டாயா?

பாவம் உன்னிடம் நச்சுப் பாம்புகள்
பதுங்கி உறைகின்றனவே
ஊதிக் குழலெடுத்தவற்றை அழைப்பேன்
உனக்கு விடுதலை அளிப்பேன்.

உனக்காக நான் செய்யும் உதவி
மறக்க மாட்டாயல்லவா
உன்னை யாரும் போற்றாவிடினும்
உவந்துனைப் பாட நான் வருவேன்.

**சௌ. உமாகாந்த்**
தரம் - 9
மு/கலைமகள் வித்தியாலயம்
முள்ளியவளை
முல்லைத்தீவு

# தண்ணீர்

இயற்கை அன்னையின் அருளால் கிடைக்கும்
இன்னமுதாம் இனியசுவைத் தண்ணீராம்
வெளிச்சம் தரும் மின்வலுவாம்
மின் வலுவது வருவதும் நீராலாம்

இயற்கை தந்த அருஞ்செல்வம்
இதனைப் பேணுதல் நம்கடனாம்
நெல்லும் உயர்வதும் நீராலாம்
இயலும் நீரைத் தேக்கிடுவோம்

நீரைப் போற்றிப் பேணிடுவோம்
நிரம்பப் பயனைப் பெற்றிடுவோம்
பாரில் சிறந்த உழவர் நாம்
நீர்ப் பாசனச்சிக்கனம் கற்றிடுவோம்.

சௌ. உமாகாந்த்
தரம்-9
மு /கலைமகள் வித்தியாலயம்
முள்ளியவளை
முல்லைத்தீவு

# ஆலமரம்

ஆலமரப் பந்தலிலே
அமரும் பறவைகள் ஆயிரமாம்
அமரும் பறவைகள் உண்பதற்கு
ஆயிரம் பழங்கள் காய்த்திருக்கும்

பச்சை வானப் பந்தலிலே
சிவப்பு நட்சத்திரங்கள் போல்
இச்சைக்கிளிகள் வந்துண்ண
இரத்தச் சிவப்புப் பழங்களாம்

ஆலமரமே உன் பழங்கள்
கோதி உண்ணப் பறவை வரும்
கூடிக் குயில்கள் கூவென்னும்
ஆலங்கிளிகள் பாட்டிசைக்கும்

பாதசாரிகள் இளைப்பாற
பந்தலாக நிற்கும் மரம்
ஊஞ்சலாட விழுது விடும்
உலவும் தென்றல் தாலாட்ட

சௌ. உமாகாந்த்
தரம்- 9
மு/கலைமகள் வித்தியாலயம்
முள்ளியவளை
முல்லைத்தீவு

# காலை மலர்ந்தது

காலை விழிகள் மலர்ந்தது
கதிரவன் வானில் உதித்தது
காரிருள் ஓடி மறைந்தது
காற்றும் இலேசாய் அடித்தது

வாச மலர்களின் அழகைக் கண்டோ!
வண்டுகள் பாட்டுப் பாடின
வண்ண மயில்கள் தோகை விரித்து
வடிவாய் நடனம் ஆடின

தலைவன் வரவை அறிந்த தாமரை
தலையசைத்து மகிழ்ந்தது
தன்விழி நீரைச் சொரிவது போல் - தலை
கவிழ்ந்து நின்றது அல்லிப்பூ

தெற்குத் திசையில் இருந்ததோ
தென்றல் காற்றும் வீசுது
தென்றல் வழி தவழ்ந்தொரு
தேன் குரலும் ஒலித்தது.

இனியதென்றல் காற்றிலே
அழகு மூங்கிலின் ஓசையோ
இன்பக்காட்டில் இருந்தோ - அந்த
இனிய ஓசை பிறந்தது.

**மா. சாந்தா**
தரம் - 8
மு/முள்ளியவளை
அ.த.க. பாடசாலை.
முல்லைத்தீவு

# எழுகின்ற சூரியன்

அதிகாலை வேளை கிழக்கு
திசையில் வானின் கீழ்
அழகான கதிர் ஒளி வட்டம்
ஆலயத்தில் மணிச்சத்தம்

கதிரவன் வரவைக்காட்டும்
பறவைகளின் சமிக்ஞைகள்
பாட்டாய் ஒலிக்கிறது
கதிரின் அழகே வாவா

பறவைகளின் ஒலிகேட்டு
மானிடர் துயில் நீத்தனர்
மனதை ஒரு முகப்படுத்தி
வணங்குகிறார் வாழ்த்தி

உதயம் ஆனவுடன் தாமரை
தன் இதயம் விரிகிறது
நித்திய கல்யாணி கொத்தாய்
நித்திரை விட்டெழுகிறது

மறைந்தாலும் சூரியன்
மறுநாளும் எழுகின்றான்
குன்றிலிட்ட தீபமாய்
குவலயமெங்கும் ஒளிபரப்பி

**க. கோபிகா**
தரம் - 10
மு/கொக்குத் தொடுவாய்
அ.த.க. பாடசாலை.
முல்லைத்தீவு

# கடல்

இயற்கையின் தேவதை பெற்றெடுத்த கடலே
உன் மேனி எவ்வளவு மெதுமை
எனினும் உன் அடி வயிற்றில் எவ்வளவு புதுமை
நீ எப்பொழுதும் மகிழ்வாகவே இருக்கிறாய்
அதனால்த்தான் கரையைத் தொட்டுத்தொட்டுச் செல்வதும் - பின் ஓடுவதும்

எவ்வளவு அற்புதம் எவ்வளவு அழகு
எனினும் உன் மேனியில் அலைகள் அதிகம்
ஆயினும் உனது அடியாழ இரகசியங்கள் உனக்குத்தான் - தெரியும்

சில வேளைகளில் அசைவின்றி இருக்கிறாய் - அவ்வேளையில்
பிறபொருளின் விம்பம் உன்னில் பிரதி பலிக்கிறது
உன்னை ஆகாயம் கட்டி அணைக்கிறது
அதனால்தான் அதன் நீல வர்ணத்தை ஒத்திருக்கிறாய்

நீ எவ்வளவு பெரியவள்
உன்னிடம் எவ்வளவு நண்பர்கள்
கோபம் வரும் போது கொந்தளிக்கிறாய்
சந்தோசம் வரும் போது துள்ளிக் குதிக்கிறாய்
எங்களைப் போலத்தான் நீயும்
ஆனாலும் எவ்வளவு பரந்திருக்கிறாய்

**ஜெகந்தினி**
க.பொ.த. (உ/த)
கலைப்பிரிவு - 2004
மு/முல்லைத்தீவு மகா வித்தியாலயம்
முல்லைத்தீவு

# பூவுலகம் ஒரு காணி நிலம்

பூவுலகு எங்கள் வீடு - இதைப்
புரிந்து நடப்பது வாழ்வு
ஓடுகின்ற ஆற்றைப்போல் - உண்மை
தேடி நடப்பது வாழ்வு

அன்னை வயிற்றில் பிறந்தோம்
அன்றலர்ந்த தாமரை போலிருந்தோம்.
பின்னர் பேதங்கள் கண்டோம்
பிய்ந்து சிதறிப் போனோம்

இனங்கள், மதங்கள் என்றே
எண்ணில்லாத பிரிவினைகள்
மனங்கள் ஒன்று சேர்ந்தால்
மனிதம் எங்கும் துலங்கும்

துன்பம் கண்டு துவள மாட்டோம்
துணிந்து எதிர் கொள்வோம்
நிமிர்ந்து நிற்பவன் மனிதன்
நேசம் கொண்டு நிறைவோம்

பூமி என்னும் தோட்டத்தில்
புன்னகைப் பூக்கள் வேண்டும்
காணி நிலம் வேண்டும் நல்ல
காதல் பயிரிட வேண்டும்.

**தி. றெளசி**
தரம் - 10
மு/கலைமகள் வித்தியாலயம்
முல்லைத்தீவு

# இன உணர்வும் மனித நேயமும்

இன பேதமின்றி
இணைந்து கொள்ளும்
இனிய பசுமை நாட்கள்
இன்று வந்தாச்சு

பொம்மர்கள் கூவிவந்து
குண்டு மழை பொழிவதும்
எறிகணைகள் வீசுவதும்
இன்றொழிந்து போச்சுது

இலங்கை மக்கள் இதயங்களில்
புதிய நம்பிக்கை பிறந்தாச்சு
பூரிப்புடன் பூத்து நிற்கும்
புதிய காலம் வந்தாச்சு

சிங்களவரும் தமிழரும்
முஸ்லிம்களும் மகிழ்ந்து கூடி
புரிந்துணர்வு செய்திடுமோர்
புனித நாளும் வந்தாச்சு

பொறாமை தீமையாவுமே
பொசுங்கிச் சமாதானமும்
அன்பு, பாசம், நேசமும்
அகத்தில் மலர வேண்டுமே

மனிதரோடு மனிதர்கள்
சரிநிகர் சமானமாய்
இனிது கூடி வாழ்ந்திடும்
இன்பம் மலர வேண்டுமே

**தி. றௌசி**
தரம் - 10
மு/கலைமகள் வித்தியாலயம்
முல்லைத்தீவு

# நல்ல சுதந்திரம்

சண்டை இனி வேண்டாம்
சாதி வெறி வேண்டாம்
இனவெறியும் வேண்டாம்
இனிய அன்பு வேண்டும்

அகதி முகாம்களிலே
அடைந்த வாழ்வு வேண்டாம்
அலைஞ்சலைஞ்சு திரியும்
அவல வாழ்வு வேண்டாம்

கையில் விலங்கு பூட்டி
காலமெல்லாம் அடிமையாக
சித்திரவதைப்படும்
சிறைப்பூட்டு வாழ்வு வேண்டாம்

இடிந்து போன பள்ளிகள்
நிறமிழந்த கரும்பலகை
இனி எமக்கு வேண்டாம்
இன்பக்கல்வி வேண்டும்

எல்லாரோடும் கூடி
இன்ப மகிழ்வெய்தி
நல்ல சுதந்திரத்தை
நாமெல்லாம் அநுபவிப்போம்.

தி. றௌசி
தரம் - 10
மு/கலைமகள் வித்தியாலயம்
முல்லைத்தீவு

# மழைதரும் காடுகள்

பூமித்தாயின் பச்சைக் கனவுகள்
பூரித்து நிற்கும் காடுகள்
புன்னகை பூக்கும் குழந்தைகளாய்
தலையை ஆட்டும் மலர்கள்

பூரித்த காடுகளை புன்னகை மலர்களை
சேர்த்தே தொலைத்தான் மனிதன் இவன்
பூரிப்பிழந்து சுருண்டு விட்டான்
புன்னகை இழந்து வரண்டு விட்டான்

காடில்லை என்றால் மழையில்லை
மழையில்லை என்றால் பயிரில்லை
பயிரில்லை என்றால் உணவில்லை
பாரில் மனிதர்க்கு வாழ்வில்லை

விஞ்ஞான விருத்தி எனச் சொன்னான்
விதவிதக் கருவிகள் செய்கின்றான்
விஞ்ஞானி மண்டையைப் பிய்க்கின்றான்
வேண்டினால் மழைவரம் தருவானோ?

காடுகள் மழைதரும் தேவதையாம்
கண்முன் விரியும் தோகைகளாம்
காட்டின் தேவதை வரம் தருவாள்
காட்டை வளர்ப்போம் மழைபெறுவோம்.

**தி.நௌசி**
தரம் - 10
மு/கலைமகள் வித்தியாலயம்
முள்ளியவளை
முல்லைத்தீவு

# வாழ்க்கைச் சக்கரம்

கொக்கு வடிவான தொடுவாயாம்
எங்கள் கொக்குத் தொடுவாய்
கொக்குப் பறந்தது போல் நாம்
கூண்டை விட்டுப் பறந்தோம்

கொக்குப் பறந்தாலும் குந்துவதற்கு
கூடிருக்கு மரத்துச்சியிலே
குந்துவதற்கு எமக்கொரு வீடில்லை
கூடிக் கற்பதற்கு பள்ளிக்கூடமில்லை

விதைப்பதற்கு எமக்கு வயலில்லை
வேறு தொழில்களுக்கும் வழியில்லை
மரத்தடியே தஞ்சமெனக் கொண்டோம்
மாளிகை எமக்கு அதுவேயாம்

கிடுகால் வேய்ந்த பள்ளிக்கூடமே
கிட்டியது எமக்குப் படிப்பதற்கு
எதுவானாலும் என்ன விடாமல்
எப்படியோ கல்வி கற்று வந்தோம்

கற்று வரும் வேளையிலும்
கொலைவெறி கொண்டவர் துரத்துகிறார்
சுற்றிச்சுற்றிப் பழைய கதை தான்
நாடெல்லாம் நாமலைந்தோம்

அலைந்தோம் அலைந்தோம்
ஆகாயப் பறவை போலேதான்
ஆனாலும் படிப்பை விட மாட்டோம்
அலைந்தாலும் அறிவைப் பெற்றிடுவோம்.

**கோபிகா**
மு/கொக்குத் தொடுவாய்
அ/த/க/வித்தியாலயம்
முல்லைத்தீவு

# ஐயோ அநியாயம்

தேரினில் கதிரவன் உலா வர
இதழ் திறக்கும் மலர்கள்
திவ்வியமாய் வலம் வருகின்ற வண்ணத்துப் பூச்சிகள்
உட் குடைந்து பூக்களில் அடைக்கலமாம்

ஆடி ஆடிக் களிப்பில் மிதக்கும்
தும்பிமலர் மது உண்கிறதாம்
அதன் பின் காற்றின் தாலாட்டில்
கண் அயர்கையில் ஓணான் வந்ததுவாம்

இன்பக் கனவு காண்கையிலே
இரையாய் அழகை உண்கிறதே
தும்பியின் அழகை உண்பதுவோ
ஐயோ என்ன பரிதாபம்

ஏதும் அறியாப் பட்சிகளை
இரையாய் கொன்றுண்பதுவோ
சோதிப்பிழம்பே பெருமானே
சோதனை அவைக்கேன் சொல்லிடுவாய்

ஈசா அழகைப் படைத்தவனே
இக்கொடுமை கண்டு இரசிப்பாயோ
கூசாக் கொடுமை தாங்குவதோ
கொலையுறும் உயிர்களுக்கு இரங்காயோ
அழகின் அடையாளம் இன்றி
அழிவதோ உயிர்கள் பரிதாபம்.

**க. தர்சினி**
*A/L* கலைப்பிரிவு -2003
மு/முல்லைத்தீவு ம/வி
முல்லைத்தீவு

# கவிதைப் புறா

அழகு நிலா வானிலே
பறந்து திரியும் பறவையே
பழகும் நேசப் புறாவென
வளர்த்து வாறோம் உன்னையே

பலப்பலவாம் நிறங்களில்
பார்க்க அழகு உடைய நீ
சிறகு விரித்து வருகிறாய்
சிறந்த குணம் உடையதாய்

மஞ்சள் வயல்கள் கண்டதும்
மகிழ்ச்சி கொண்டிறங்குவாய்
உண்பதற்கு நெல் மணிகள்
உவந்து பொறுக்கி உண்கிறாய்

குற்றம் செய்த மனம் போல
குறுகுறுத்துக் கொண்டிருக்கிறாய்
என்ன குற்றம் செய்தாயோ
எனக்குச் சொல்வாய் வெண்புறா!

கூண்டில் உள்ள மனிதர்கள்
அடைத்து வைக்கும் கொடுமைக்கோ
குறுகுறுத்துத் திரிகிறாய்
குற்றம் நாங்கள் செய்ததோ

கற்பனையில் உனை வரைய
கன முயற்சி செய்கிறேன்
விற்பனைக்கு அல்லவே
விடுதலையின் வெண்புறா.

ம. காஸ்ரோ
மு/றோ/க/த/பாடசாலை
முல்லைத்தீவு

# இயற்கை அழகு

இயற்கையின் இன்பம் வேறெங்கு உண்டு
உலகெங்கும் பரந்துள்ளது இயற்கை
செயற்கை இயற்கை ஆகாது
இயற்கையின் அழகு இதயத்தில் தெரியும்

இயற்கையை மனிதர்நாம் அழித்து விட்டால்
மனிதரின் வாழ்வியக்கமும் அழித்து விடும்
இயற்கையில் நாம் இலயித்து நின்றால்
எமக்கது தன்னைத் திறந்து வைக்கும்

இயற்கையின் அழகோர் பெண்ணழகாம்
இன்பம் ததும்பும் பால் குடமாம்
பால்குடம் போன்ற நிலவழகாம்
பழம் பெரும்பூமி பேரழகாம்

பூமியின் அழகைப் பாதுகாப்போம்
பூஞ்செடி கொடிகள் நாம் நடுவோம்
வீடுகள் தோறும் மரம்நடுவோம்
மரவீடுகள் கட்டி விளையாடிடுவோம்.

**செ. ஜான்சி**
மு/கலைமகள் வித்தியாலயம்
முள்ளியவளை
முல்லைத்தீவு

# தாய்க்கு ஒரு பாட்டு

என்னை உருவாக்கி உதிரத்தைப் பாலாக்கி
ஊட்டி வளர்த்தவள் அன்னை

ஒரு சிற்பியால் உருவைச் சமைக்க முடியும்
உயிர் கொடுக்க முடியாது
உயிரெனும் சிற்பமாய் என்னை
உருவாக்கியளித்தவள் தாய்

அன்புக்கு இலக்கணம் தாய்: அவள்
தருகின்ற முத்தமோ எவரெஸ்ட் சிகரம்
முனிவரின் அமைதியும் 'தேவதையின் அழகும்
ஒருங்கே திகழ்வது தாயிடம் தான்

தாயின் அன்பைத் தருவார் யார்
தயவின் வடிவே அவள் தானே
தாய்மை என்பது பெருஞ்சக்தி அதன்
தத்துவ வடிவின் வாசம் இவள்

கவிதை எழுத முற்பட்டேன்
நீயே கவிதையரங்கம்மா
தாயின் கதையை எழுத முற்பட்டேன்
கதைக்கருவின் தத்துவம் நீயம்மா

கடலும் நீயே ! காற்றும் நீயே!
கார்முகிலும் கருணை மழையும் நீயே!
பாருலகில் பரம்பொருளும் நீயே!
பாதம் பணிந்தேனம்மாவே!

**லோ. ஜெய்கரன்**
தரம்-8
மு/கள்ளப்பாடு அ.த.க.பாடசாலை.
முல்லைத்தீவு

# அநாதை

அன்று இரவு நான் உறங்க முற்பட்டேன்
தூக்கம் வரவில்லை
அனைவரும் தூங்கினர்
என் மனம் எதையோ உணர்த்தி நிற்கின்றது
மனமின்றி தூங்கினேன்

திடீர் என ஒரு சத்தம் காதைக் கிழித்தது!
காலை மெல்ல எடுத்து வைத்து
கதவைத் திறந்தேன்
ஒரே இருட்டு கண்கள் இருளடைந்து விட்டன!

ஏதோ, இன்னும் பெரிய சத்தம்
என்னது? பெரிய வாகனங்களின் இரைச்சல்
ஊரில் மக்கள் இல்லை!
ஓடோடிச் சென்றேன்
விறாந்தையில் தூங்கிய அம்மாவை எழுப்ப
அங்கே காணவில்லை அம்மாவை

நான் என்ன செய்வேன்
வெளியில் தப்பி ஓட முயன்றேன்
ஒரு மாதிரியாய் ஓடி ஓர்
பஸ்தரிப்பு நிலையத்தினுள் சென்று அமர்ந்தேன்
என்றும் நான் அநாதையா?
என்று மனதைக் குழப்பிக் கொண்டேன்.

ஆதரவு எதுவுமின்றி தவிக்கின்றேன்
எனது வாழ்க்கை இடமான பஸ்தரிப்பு நிலையத்தைப்
பார்த்து தலையாட்டியபடி
கேள்விகளைக் கேட்கின்றேன்
அதுவும் என் கேள்விக்கு தலையசைக்கிறது!

**ஜயந்தி சிவதாஸ்**
தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர்
கல்லூரி
திருக்கோணமலை.

# தேசத்தை பிரிந்த நாள்

முன்னர் கோயில் மணி ஓசையும்!
உயிர்கள் உறவாடும் ஓசையும்!
இப்போது ஆயுத ஓசையும்
அழுகை ஒலியுமாக!

மாடி மனைகள் மகிழ்வித்த மனித தேசம்
இன்று இரத்த ஆறு ஓடும் போர்க்களமாய் மாறியது

தரைக்கு மேல் வாழ்ந்த நாட்கள் போய்
தரைக்குள்ளே வாழ வைத்த நாட்களாக மாறின

உறவுகளோடு உறவாடிய காலம் போய்
ஊனமுற்றாரோடு உறவாட வேண்டிய காலமாக மாறின!

என்று தணியும் இந்தச் சோகம்?

**க. விஜயகுமாரி**
கலைப்பிரிவு (2005)
தி/மெதடிஸ்த மகளிர் கல்லூரி
திருக்கோணமலை

# எம்மிடத்தில் வார்த்தை இல்லை

அன்று விடியற்காலை
ஐந்து மணியிருக்கும்
அழுகுரல்கள் பல பக்கங்களிலிருந்தும்
எதிரொலிக்கின்றன.
'அவலம் நடந்து விட்டதோ?'
அம்மா அலறினாள்!
அங்கங்கு மக்களின்
அழுகுரல்களும் கேட்டன!
'ஐயோ' என்று அழும் சத்தம்
எரிமலையாய் வெடிக்கின்றது.

தூரத்தே மக்கள் கும்பல்
தூர்த்தல் மழை பெருகுவதை போல்
பெருகுகிறது.
ஆடியோடித் திரியும் பிள்ளைகள்
அழுது கொண்டு நிற்கிறார்கள்
என்ன நடந்திருக்கும்?
இதயம் வெடிக்கிறது!;

அழுகின்றவர்களைப் பார்க்கும் போது
அவலம் நடந்து விட்டது தெரிகிறது.
மக்கள் கூடியிருக்கும் இடத்திற்கு
நாங்களும் ஓடினோம்
மழலைகளின் அழுகுரல்கள்

வானைப் பிளக்கின்றன.
பெற்றாரும், உற்றாரும் அழும்
அந்த அவலக் குரலைக் கேட்க
அங்கிருந்தவர்களின் கண்களிலிருந்து
கண்ணீர்
ஆறாகப் பெருக்கெடுத்து ஓடியது
தமது வீட்டிற்குள் புகுந்த இராணுவத்தினர்
வீட்டில் இருந்தவர்களில் ஓரிருவரை
கண்முன்னே வெட்டி வீழ்த்திய
அந்தக் கொடூரமான சம்பவத்தை
வாய் விட்டு அலறுகின்றனர்
எங்கும் இரத்த வெள்ளம்!
எவர் கண்ணிலும் கண்ணீர்!

இதை பார்த்துக் கொண்டிருக்கும்
எங்களுக்கும் நாளை இப்படித்தான்
என்பதை நினைக்கும் போது
மனம் ''ஓ''வென்று கதறுகிறது
தம் பிள்ளைகளை, கணவரை
இழந்து நிற்பவர்களுக்கு
ஆறுதல் சொல்வதற்கு
அந்த நேரத்தில்
எம்மிடத்தில் வார்த்தை இல்லை!

**அ. பிரியதர்சினி**
தி /நாமகள் வித்தியாலயம்
திருக்கோணமலை

## கருகிய மலர்

அழகிய சிறுமி
ஆறேவயது
நிலவு முகம்
குழந்தைத்தனம்
கபடமற்ற பேச்சு
உருகவைக்கும் சிரிப்பு
இவைகளை கொண்ட
பால் மணம் மாறா மழலை அவள்
எந்தப் பாவமும்
அறியாதவள்
பாருங்கள் உங்கள்
போர் வெறியை
இன்று அவளோர்
கருகிய மலர்

*K.* தயாளினி
கலைப்பிரிவு - 2005
தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி
திருகோணமலை.

# நட்பு

ஓராயிரம் உறவுகளிடையே
ஓங்கி வளரும் நட்பு
காலம் உள்ள வரை
கண்சிமிட்டிக் கொண்டிருக்கும்

பெற்றோரிடத்தில் சொல்லாதவற்றை
நண்பர்களிடத்தே சொல்கிறோம்
உறவுகளிடத்தே உண்மையைச் சொல்லாமல்
நண்பர்களிடத்தே நம்பிச் சொல்கிறோம்.

நட்பு என்பது புனிதமான ஒன்று!
அதைப் புரிந்து கொள்ளாத பலர்
நண்பர்களுக்குச் செய்யும் துரோகம்
பெற்றவர்களுக்குச் செய்யும் துரோகமே.

உயர்ந்த இடத்தில் ஒருவர் இருந்தால்
காரணம் பெற்றோர் என நினைக்கிறார்கள்
சிலவேளை நண்பராகவுமிருக்கும் என்பதை
பலர் மறந்து விடுகிறார்கள்.

ஆடை இல்லாதவர்களை
அரை மனிதர் என்கிறார்கள்
நண்பர் இல்லாதவர்களை
எப்படிச் சொல்கிறார்கள்?

உலகத்தில் ஓராயிரம்
உறவுகள் இருந்தாலும்
நட்பு என்னும் உறவு
நளினமான உறவு

**அ. பிரியதர்சினி**
தி /நாமகள் வித்தியாலயம்
திருக்கோணமலை

# அன்றைய நாளில்

சூரிய அஸ்தமனத்தின் ஒளியைக் கண்ணுற்ற எம்மக்கள்
வெடிகுண்டுகளின் ஒளிச்சிதறலைக் கண்டு
மனம் நொந்து நின்றனர், அன்றைய நாளில்!

போர்க்களம் எங்கே? இரத்த பந்தம் அற்றோர் போராடும் தளம்
எங்கே? ஊகிக்க முடியாத அளவுக்கு
இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடியது - அன்றைய நாளில்!

வீர வெறி பிடித்த வீரர்களை விடவும் - கொலை வெறிபிடித்த
விஷஜந்துக்கள் குரவையாட்டம் ஆடின - அன்றைய நாளில்!

அம்மா அம்மா என்று அலறிய எமது அப்பாவி மானிடர்களுக்கு
ரத்த ஆறு ஓடும் இரைச்சலை உணரச் செய்தது.
- அக்கொடுமையான நாள்!

மறுநாள் பிறந்தது
அதே போராட்டம்
அதே போர் தொடுப்பு
மாற்ற முடியாதா இப்பிணியை
இன்றைய நாளில்

**சுமையா ஹிஸ்மதி**
2005 கலைப்பிரிவு
திமெதடிஸ்த பெண்கள் கல்லூரி
திருக்கோணமலை.

# அந்தோ பரிதாபம்

கண்கள் உட்சென்று
கவலைகளை சுமந்த படி அகதி முகாமினிலே
ஓர் மூலையில் அனாதை என்று முத்திரையிட்டு - தன்னை
அடையாளப்படுத்தி நின்றாள் அச்சிறுமி
தீக்குச்சிகளை கொண்டு உருவெடுத்த அப்பிஞ்சுப் பாலகியும்
பட்டினியால் உடல் சூம்பிக் காணப்பட்டாள்

அவளின் முகத்தினிலே யுத்தத்தின் வடு தெரிந்தது
அந்தோ பரிதாபம் அவள் கண்முன்பே இராணுவத்தினால்
அன்னை தந்தையை இழந்து விட்டாள் அச்சிறுமி

மக்களுக்கு உரித்தானது சோகம் என்பது போல்
அழுதழுது சிவந்து விட்ட கண்களுடன் காணப்பட்டனர்
சிலர் அந்தச் சோகத்திலும் தங்கள் உயிரை கையில்
பிடித்து அன்னிய நாட்டிற்கு ஓட்டம் பிடித்தனர்

நாட்டுப் பற்று நிறைந்தவர்கள்
பீரங்கி தாக்குதலுக்கும் குண்டு வீச்சுக்கும்
நடுவில் தாக்குண்டு மாண்டார்கள்
ஐயோ இது என்ன கொடுமை!
நமக்கில்லையா விடுதலை?

**ராஜினி - வெ**
தி/மெதடிஸ்த பெண்கள் கல்லூரி,
திருக்கோணமலை.

# பாலையாகும் வாழ்க்கை

இரவின் வெளியில்
நீக்கல் தெரியும் குடிசையில்
குப்பி லாம்பின் ஒளியில்
படிக்கிறான் பரீட்சைக்காய் ஓர் மாணவன்
அந்த பாலை நில வெளியிலே!

அது இன்று தான் பாலை
முன்னர் ஓர் சோலை
குண்டு மழையின்
குதம்பைத் தனத்தால் குறுகிய காலத்தினுள்
பாலை ஆகி விட்டது அந்த சோலை!
இந்த மாற்றத்தையும் படிக்கிறானோ அந்த மாணவன்.

அந்தோ பரிதாபம் குப்பிலாம்பு
அணைந்து விட்டது மீண்டும்
பற்ற வைக்கின்றான் தீக்குச்சி கொண்டு
மீண்டும் அணைகிறது அக்குப்பிலாம்பு
மீண்டும் பற்ற வைக்கிறான்.
எத்தனைக்கு என்று பற்ற வைப்பது?
தீர்ந்து போயின தீக்குச்சிகள்.
புத்தகத்தை மூடி வைத்து விட்டு
குப்புறப்படுத்து விட்டான் கட்டாந்தரையிலே

எத்தனை நாட்கள் தொடரும் இவன் படிப்பு?
நாட்கள் வாரங்களாகும்
வாரங்கள் மாதங்கள் ஆகும்
மாதங்கள் இரண்டரை வருடத்தை கடத்திவிடும்.
சித்திரையும் வந்து விடும்
சீரழியும் அவன் வாழ்க்கை
சோலை பாலையானது போலவே.

**க. திரியம்பவன்,**
2005 (கலைபிரிவு)
தி/உ/விவேகானந்தா கல்லூரி
திருக்கோணமலை

# இனி நினைத்து என்ன பயன்

பிள்ளைகள் ஆறிலே ஆடலும் பாடலுமாய்
ஆனந்தக் கூத்துடன் இருப்பர்
ஆறு இரண்டு ஆனதும்
பள்ளியும் பாடமும் அவர்களைச் சூழும்
ஏறும் வயது தான் பதினாறை அடைந்ததும்
எண்ணிலா காதலில் தவிப்பர்
சந்திக்கு சந்தி கடற்கரையோரம்
தெருக்களை தம் சைக்கிளால் தேய்ப்பர்
திரையரங்கில் வர்ணத் திரைப்படம்
ஐஸ்கிறீம் கடையில் அழகான உபசரிப்புகள்
இப்படியாய் தாறுமாறனதோர் வாழ்க்கையை வாழ்ந்தபின்
அவர்கள் தம் நிலை நினைத்தே வாடுவார்.

**க. திரியம்பவன்,**
2005 கலைப்பிரவு
தி/உ/விவேகானந்தா கல்லூரி
திருக்கோணமலை.

# ஆசைப்பட்டது

ஆசைப்பட்டது ஒரு துண்டு வேட்டிக்குத்தான்
ஆனால் - அதுவும் ஆசைப்பட்டது போல் கிடைக்க வில்லை
ஆசைப்பட்டது மூன்று நேர சாப்பாட்டுக்குத்தான்
ஆனால் - இருந்த ஒரு வேளை உணவையும் பறித்து
ஊசல் ஆடும் உயிரை சுமக்கும் வெறும்
கூடாய் அலைய விட்டார்கள்!
ஆசைப்பட்டது அமைதியான சமாதானத்திற்கு
ஆனால் அதையும்
அரசியல்அடாவடித்தனங்களால்
அழித்து விடுவார்களோ?

**சி. ரஜிபா**
கலைப்பிரிவு (2005)
தி/விக்னேஸ்வரா மகா.வி.
திருக்கோணமலை

# பெண்ணே !

காலத்தின் கோலத்தால் கண்ணுக்கினிய
பெண்ணாக உதித்து விட்டாய்!
காளையர்கள் அடக்குகிறார்கள்
காரத்தை காட்டாது
ஆழ்கடலாய் அமைதி கொள்கிறாய்!
சுட்டெரிக்காத சூரியனாய்
சுடர்விடும் அகல் விளக்காய்
ஒளி கொடுக்கிறாய்!

அசைந்தாடும் அலைகளின் நடுவில்
துடுப்பில்லாத் தோணியாய்
கரைகாண காலம் எண்ணுகிறாய்
கரைந்திடும் இரவிற்கு கண்ணீரை சமர்ப்பித்து
விடியும் பொழுதிற்காய் விரதமிருக்கிறாய்!
ஊமையான உன் உணர்வுகளுக்கு
உண்மையான அர்த்தம் தேடுகிறாய்!

உன் நிலை கண்டல்லவா
பாரதி புதுமைப் பெண்ணை படைத்தான்
உன் கண்ணைப் பார்த்தல்லவா
கண்ணதாசன் கவிஞன் ஆனான்!
பிறகு ஏன் பெட்டிப் பாம்பாய்
முடங்கிக் கிடக்கிறாய் வீட்டிற்குள்?
எழுந்து புறப்படு! உன் விடியலைத் தேடி.

தேசங்கள் ஒன்று திரண்டு செல்வோம்
தேர்வுகளில் வரும் தோல்விகளை
திறந்த மனதுடன் ஏற்போம்
தடைக்கல்லை படிக்கல்லாக்கி
வெற்றிக் கொடியை ஏற்றுவோம்.
சுற்றித் திரியும் குருவிகளாய்
வெட்டவெளியை வலம் வருவோம்

**கு. விதர்ஷினி**
தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி
திருக்கோணமலை

# விடியலை நோக்கி......

கதிரவன் பொங்கி எழுகின்ற வேளையில்
மக்களும் குதூகலத்துடன்
திடீரென மின்னலைப் போன்று பீரங்கிகளும்
இடியைப் போன்று செல்களும்
கூவிக் கொண்டு தென்னம் கீற்றைச் சிதறின!
நிலப் பள்ளத்துடன் நீரும் ஊறின!

வெறுமையில் வீதிகள் கிடந்தன
பேரிரைச்சலுடன் இராணுவ இயந்திரங்களும் முன்னேறின
கடலலைகள் அமைதியடைந்தன போலிருந்தன
நாம் பதுங்குழியிலிருந்து எழுந்தோம்
வீதியெங்கும் இரத்த வெள்ளப்பெருக்கு
வெள்ளைப் புறாக்கள் மீதிலும் தான்
பெண்கள், குழந்தைகள், தனியாய் இருளில் விடப்பட்டனர்.
இவர்களுக்குண்டா விடிவு?
எப்போது தான் விடிவு

கு. விதர்ஷினி
தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி
திருக்கோணமலை

# புரியாமை

அழகாய் புடவை உடுத்து
அதற்கேற்றால் போல் காதணியிட்டு
மெருகேறிய முகத்தின் நடுவில் புருவ
மென்மையாய் பொட்டிட்டு
ஊர் உலகெலாம் யாரோ இவள்
யாரைப் பார்க்க செல்கிறாள்......?
போகட்டும் போகட்டும் வழிப்
போக்கிரிகள் பிடிக்கட்டும் - என
பொறாமையால் முகம் சிவக்க - இவள்
பொறுமையாய போகிறாள் வீதியில்
பஸ் தரிப்பிடத்தில் மூதூர்பஸ் அருகினிலே
முதல் தம் கால் பதிக்க முயன்ற - மக்களின்
முயற்சியால் இவள்
முன்னால் இடிக்கப்பட்டு பின்னால் நிற்கிறாள்
ஒரு விதமாய் ஏறிவிட்டாள்
ஓரமாய் இருந்த பின் சீற்றில் ஒதுங்குகிறாள்
எதிலுமே நான் பின்னால் தானா என
நெஞ்சம் குமுறி நெடுமூச்சு விடுகிறாள்!
அவசரமாய் வந்த ஒருவன்
பயணப்பையை அவள் மடிமீது வைக்க
இயலாமை தந்த வேகம்......
இவனை முறைக்கிறாள்
அந்த நிமிடத்தில் இருவர் கண்களும் பரிபாஷை பேசின!
முறைப்பே இருவர்க்கும் முனைப்பாகியது
அந்த முனைப்பே இருவரினதும் இணைப்பாகியது
பயணங்கள்! பலர் முன்பும் காதல் நாடகங்கள்!
பலநாள் கழித்து புரியாமை புரிந்தது
அவன் திருமணம் முடித்தவன் என்று!
இடிந்து போனாள் இவள்
"இதிலும் நான் கடைசிதானா?"

**கு. விதர்ஷினி**
2005 கலைப்பிரிவு
தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி
திருக்கோணமலை

# மறக்க முடியுமா?

இதயத்தின் இரண்டு அறைகளுமே திறந்து கொண்டன
காயத்திலே கசியும் இரத்தமாய்
கண்ணில் வடிந்த கண்ணீரிலே
காலங் கடந்த கதைகளும் கரைந்தது.

காலத்தின் கோலத்தால்
மனிதனாய் பிறந்து விட்டதால்
பட்ட அவலங்கள் எல்லாம்
பசுமரத்தாணியாய் பதிந்து விட்டனவே.

கோயில் மணியோசை மணி மூன்றைக் காட்ட
வானில் பறந்த ''சுப்பர் சொனிக்'' வரிசை பிறழாமல்
குண்டு மழை பொழிகின்றது.

''லப்டப்'' என்ற ஓசை
ஒரு கணம் நின்று மீண்டும்
தன் வேலையை வெகு வேகமாய் செய்கிறது

அறுந்த மாலையில் சிதறும் முத்தாய்
தெளிக்கப் படுகிறார்கள்
ஜடமாகிப்போன மனிதர்கள்

நிலவு தேய, நிறமும் மாற,
நீரில்லா மீனாய் - துடிக்கும்
பச்சிளங் குழந்தையின்
''அம்மா'' என்ற அலறலும்
பாதியில் நின்று விட்டதுவே

காலத்தின் கோலத்தால்
மனிதனாய் பிறந்து பட்ட அவலங்கள் எல்லாம்
கல்லில் செதுக்கிய சிற்பமாகி - விட்டனவே
மறக்க முடியுமா?

# சமாதானம்

சமாதானமாம் சமாதானம்
எங்கே இந்தச் சமாதானம்?
நாட்டுக்கும் நாட்டுக்குமிடையிலில்லை சமாதானம்
ஊருக்கும்ஊருக்குமிடையிலில்லை சமாதானம்
வீட்டுக்குள்ளேயே இல்லை சமாதானம்
சமாதானச் சின்னமாம் வெண்புறாவைப் பறக்க விடுகிறார்கள்
அதையே துப்பாக்கி ரவைகளால் சுட்டு வீழ்த்துகிறார்கள்
சமாதானம் என்ன காசு கொடுத்தால்
கடையில் கிடைக்கும் விஸ்கோத்தா???
இவ்வாறிருந்தால் எவ்வாறு கிடைக்கும் இச்சமாதானம்?
போராடுவோம்.... போராடுவோம்.... முயற்சி செய்து
போராடினால் மலரும் இந்தச் சமாதானம்!!!

**பேரானந்தராஜா பிரதீபன்**
2005 கலைப்பிரிவு
தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி
திருக்கோணமலை

# சந்திப்பு

புகை வண்டி நிலையம்
கண்டேன் அவளை
பல வருட இடைவெளியின் பின்னர்
என்னை கண்டதும் அவள்
கண்களின் இமைகள் நடனமாடின
பின் அந்த குவளை மலர்களில் இருந்து
கண்ணீர் வழிந்து அவள் மடியில் உறங்கிய
குழந்தையின் நெற்றியில் வீழ்ந்து
அதன் தூக்கத்தை கலைக்கின்றனவே
ஓ உனக்கு திருமணம் ஆகி விட்டதா
நான் இருந்த ரயில் கருகிறதே
போய் வருகிறேன் அல்லது
போய்வா

**வி. நிசாந்தன்**
**தி/உ.வி.கல்லூரி**

# புறப்படு தோழி

தோழி
பூவுலகில் புஸ்பிக்கப்பட்ட நீ கண்டது என்ன.....?
இன்னும் எத்தனை
இன்னல்களை தாங்கிக் கொள்வாய்?
அடங்கி, ஒடுங்கி அடிமையாக வாழும் உன்னைப் பார்க்கையில்
அழுவதா, சிரிப்பதா? புரியவில்லை எனக்கு,
நீயாகவே - ஏன் விலங்கை மாட்டிக் கொண்டாய்?
உணர்வுகளைப் புதைத்து விட்டாய்
பொறுத்தது போதும்..... புறப்படு - உன்
அடிமைத்தனத்தை களைந்தெறி
பெண் என்ற போர்வைக்குள் புகுந்து
நீ கண்டதென்ன?
தினம் தினம் மனதிற்குள் வெந்து மடிகிறாயே,
இப்படியே இருப்பதுதான் உன் முடிவா?
சுதந்திர உலகம் காத்துக் கொண்டுள்ளது - புறப்படு
அடிமனதில் உறங்கிக் கொண்டிருக்கும்
ஆற்றலை வெளிப்படுத்து....
சமூகம் உனக்கு விடுதலையைத் தரப்போவதில்லை
நீயாகவே பெற்றுக் கொள்
எழுதப்படாத எத்தனை கொடூரங்களை
சுமந்து விட்டாய்?
மெழுகு வர்த்தியாய் உருகியது போதும்
உனக்குள் ஒளிவட்டம் இருப்பதை உணர்ந்து கொள்
வேதனை வாழ்வை வெறுத்து விடு
உத்வேகத்துடன் புறப்படு
நாளைய சந்ததியாவது சுதந்திரமாய் வாழட்டும்.

**சி. ஜயனி**
2005 கலைப்பிரிவு
தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி
திருக்கோணமலை

# பசியின் கொடுமை

அன்று பாடசாலை மணி ஒலித்தது!
சந்தோஷத்துடன் புத்தகங்களை அடுக்கிக் கொண்டேன்!
பாடசாலையை விட்டு வெளியேறினேன்!
ஏதோ ஒரு சத்தம் கேட்டது
திரும்பிப் பார்த்தேன்
என்ன அது ஒரு வரண்ட சத்தம்
சுற்றி வர யாரும் இல்லை
ஒரு சுவரின் மூலையா உன் வீடு
தனிமையில் இருந்து என்ன செய்கிறாளோ
தெரியவில்லை அந்த இளம் பிஞ்சு
கண்கள் இருண்டு கிடந்தன....
வாய் புளிப் பேறிக் கிடக்கும் போல் இருக்குதே,
தலையோ பற்றைக் காடு
கையோ மெல்லிய ஈக்கிள் தடி,
உடலோ ஊர்வனவற்றின் தோற்றம்
அருகே வந்தேன்...........
'யார் அம்மா நீ....?
திரும்பிப் பார்த்தாள் அந்த வாடிய மலர்
இளவயதில் துள்ளித் திரியும் மானைப் போலன்றி
சோகக் கண்ணீர் வடித்தாள் அந்த வாடிய மலர்!
அருகில் அழைக்க வந்தாள்
ஒரு துர் வாடை
'யாரம்மா நீ'
பசிக் கொடுமையின் அடையாளமா நீ
உன் வயிற்றினுள் என்ன ஒரு போர் முழக்கம்
''என்னம்மா சாப்பிட்டாய்
ஏதும் கிடைக்கவில்லையா?''
கூறியது தான் தாமதம் மறுகணமே
'இல்லை' என்ற வரண்ட வார்த்தை
''நீ யாருடன் வந்தாய்?''
திரும்பிப் பின்புறம் காட்டினாள்
''என்னது எரிந்த மரமா?''
''இல்லை இல்லை''
என் அப்புச்சி
ஐயா.... என்ற படி நான் அவரை நெருங்கினேன்.

- சி. ஜயனி -

# நாளை வரும் நாளை எண்ணி

இவ்வளவு நாளும் எரிமலையாய் வெடித்தக் கிடந்த அவ்வீடு
ஏன் இன்று அமைதியாய்க் கிடக்கின்றது....?
சற்றுத்தான் பார்ப்போமே எனத் தலையை நீட்டினேன்
ஓர் அமைதிக்கு உதாரணமாக இந்த இளம் சிட்டு
என்ன செய்கின்றது?

நாளை வரும் நாளை போர்த்திக் கொண்டு
கனவு காண்கின்றது
கண்கள் ஒரு பக்கம் சாய்ந்து இருக்க
கால்கள் அவன் சொல்லைக் கேட்டபடி
அசையாதிருக்க.... பின்பு
விண்மீன்கள் அங்கும், இங்குமாக
ஓடித் திரிவதைப் போன்ற இருகண்களும்
என்னத்தைத் தான் தேடுகின்றன?
சமாதானப் புறாக்களைத் தானே
அது தேடுகின்றது.
சமாதானம் எப்போது வரும்? புறா எப்போது
திரை விரித்தாற் போற் சூழ்ந்திருக்கும்
என்றெல்லாம் அவனின் கற்பனைச் சக்கரம்
மாறிமாறி சுழல்கின்றது.
ஆம், சக்கரம் சுழல்கின்றது
சக்கரத்தை நிறுத்துவதற்காகவா...?
ஒரு சத்தம்.........
மற்றவருக்குக் கேட்கின்ற அந்தக் கொடிய சத்தம்
ஏன் இவனுக்கு கேட்கவில்லையா......?
காரணம் அவனின் ஆழ்ந்த கற்பனைதான்
மறுதரமும் ஒரு சத்தம்
அப்போது தான் நழுவவிட்டான்
அவன் கனவை,
சுதந்திரம் கிடைத்து விட்டது
என்ற சத்தமா?
இல்லை சுதந்திரம் வேணும் என்ற
சத்தமா அது..?
எதுவும் விளங்கவில்லை அந்த சின்னஞ்சிறிய சிட்டுக்கு,

குழந்தையின் கையில் இருந்த இனிப்பு நழுவ
விடப்பட்டது போல் ஒரு கனவா? இல்லை நிஜமா?
என்ற படி நிமிர்ந்தான்.
குருதியுடன் ஒருவரைக் கண்டான்.
கண்கள் பிதுங்க தான் எண்ணிய நாள் இத்தகையதா
என்ற கேள்வியை அவனுள்ளே எழுப்பி விட்டு
ஓட்டமும் நடையுமாக விரைந்தான் மக்களுடன்.

**சிவதாஸ் ஜயனி**
2005 கலைப்பிரிவு
தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி
திருகோணமலை.

# துளசிச் செடி

அரளி விதையில் முளைக்குமா
துளசிச்செடியான சமாதானம்?

சொந்த விதையில் எப்போது
தோன்றும் துளசிச் செடி?

இறைவா, அந்த துளசிச் செடியால்
உனக்கு அர்ச்சனை செய்ய
எனக்கு ஆசையாக இருக்கிறது

எங்களுக்கு அந்த சந்தர்ப்பத்தை
எப்போது தருவாய்

இறைவா......... இறைவா......

***S.* மயூரன்**
தி விவேகானந்தாக் கல்லூரி
உவர்மலை
திருகோணமலை.

# எந்திர வாழ்க்கை

எந்திர மயமான வாழ்க்கையடா
இங்கு மனிதனுக்கு ஏது வாழ்க்கையடா
மனிதன் செய்யும் வேலை எல்லாம்
இன்று எந்திரம் செய்யுது பார்த்துக்கடா

மனிதா,
உனக்கு எதிரி எந்திரமல்ல
உன்னைப் போல் ஒரு மனிதன் தான்

மனிதா,
நீ தொட்டால் அது அழுக்கு - ஆனால்
எந்திரம் தொட்டால் அது சிறப்பு

இப்படிச் சொன்னது இயந்திரம்
உண்மை இப்படித் தானா?

மனிதன் போல் பல எந்திரம்
அதற்குள்ளே உள்ளது பல தந்திரம்

மனிதனுள் எவ்வளவு சிறப்பு
ஏய், எந்திரமே
அவன் கால் தூசுக்கு ஈடாகுமா உன் உறுப்பு?
மனிதன் செத்தால் அது மண்ணுக்கு!
அவன் விட்டுச் செல்லும் பண்பாடு
எந்திரம் செத்தால் யாருக்கு?

**றெ. சால்ஸ்டர்**
தி /நாமகள் வித்தியாலயம்
திருக்கோணமலை.

# மணியோசை

இன்று பாடசாலை மணி ஒலித்ததும்
மாணவ தலைவர்களோ
தத்தம் கடமையில்
மாணவ மணிகளை
அவசர அவசரமாக அவர்களின்
விளையாட்டு இல்லங்களிற்குள்
அனுப்புகையில்
நானும் ஒரு மாணவ தலைவியாயும்
ஒரு இல்லத்தலைவியாயும்
என் இல்லத்திற்குள் நுழைகின்றேன்
என் இல்லத்தின் ஒரு புறத்தினில்
சின்னஞ் சிறிய இளஞ்சிட்டுக்கள்
புன்னகையுடன் வரவேற்க,
அவர்களின் வரவேற்பை ஏற்று
நானும் அவர்களின் அருகில் அமர்கிறேன்!
அவர்களுள் சில புதுமுகங்களும்.
இந்தப் புதுப் புன்னகைப் பூக்கள் யாரோ?
அறிய எனக்கொரு ஆசை
அன்புடன் மெல்ல அழைத்து
அவர்களின் அலங்கோல உடையை
நிதானமாகக் கோலப்படுத்தி விட்டு
நீங்கள் யாரம்மா?
நீங்கள் எங்கிருக்கிறீர்கள்?
உங்கள் வீடு எங்கே?

பதில் தம் பெயருடன்
பதிலில் இரு கேள்விக்கு ஒரு பதிலாய்
தபோவனத்திலாம்.
உடனே நெருக்கமாகிறேன் இன்னும்.
அவர்களின் பிஞ்சுக்கரங்களை
மெல்லப் பற்றுகிறேன்!
அவர்களின் இதயத்துடன்இணைந்துவிட
அவர்களின் கதையை
ஒரு நிலைப்படுத்தி செவிமடுக்கிறேன்
ஐயோ! பாவம்
என்றது உள்மனம்
ஒவ்வொரு மழலையின் கதையிலும்
ஒவ்வொரு விதமான சோகம்
ஒரு கணம் என் இதயம் கனத்தது
அவர்களின் கதை
என் உள்ளத்தை
தைத்து நின்றது
யுத்தத்தின் கொடூரத்தை அநுபவித்தவனாய்
இந்த இளஞ் சிட்டுக்களையுமா
யுத்த அரக்கன் விட்டு வைக்கவில்லை?
எனக்கோ அழுகை வராத குறை!
அவர்களின் மனங்களோ
வெம்பி வெடிக்காத குறை!
மீண்டும் பார்க்கிறேன் - அந்தச் சிட்டுக்களை
அன்புடனும் பரிவுடனும்
இல்லை இல்லை
அந்தப் புன்னகை அவர்கள் முகத்தில்
எதிர்கால வாழ்க்கையின்
கேள்விக்குறியாய் முகத்தில்
தவழ்கிறது
மீண்டும் மணியொலிக்கிறது.

**மா. ஹம்ஷத்வனி**
தி /நாமகள் வித்தியாலயம்
திருகோணமலை

# யாரிடம் சொல்லுவது?

காலனின் படையெடுப்பால்
எம் பகுதிகளில்
கடற்கரை சேனையோ கலங்கிற்று
சலசலக்கும் கடலலைகளும்
சயனமாய் கிடந்தன.
எழில் தரும் மரங்களோ
தலைகளை கவிழ்த்தன
வானில் இடிமுழக்கம்
தரையில் வெடிமுழக்கம்
காலனின் ஆக்கிரமிப்பால்
பிஞ்சுச் சிட்டுக்கள் உறவைத்தேடி
நீச்சல் போடுது சிவப்பாற்றில்
பள்ளிப் பறவைகள் பரிதவித்தபடி
கூட்டைத் தேடி சிறகடிக்குது!
கூட்டில் உள்ள பறவைகளோ
அங்கொன்றும் இங்கொன்றுமாய்
பாறைப்பிளவுகள் போல்
சிதறுண்டு கிடக்கின்றன!
யாரிடம் சொல்லுவது!
இவ் அவல நிலையை?

**அ. ஜெகதீஸ்**
2005 கலை
தி /உவர்மலை விவேகானந்தா கல்லூரி
திருக்கோணமலை.

## யாழ்ப்பாணம்

பார்த்தேன் யாழை
உடல் காயப்பட்டு தலை இழந்து
நொந்து நின்றன பனைகள்
பனைக்கே இந்த நிலை
அங்கு வாழ் மக்கள் நிலை?

## கனவு

இரவில் ஓர் ஆனந்தக் கனவு
விடியலில் கலைந்து விட்டது
இது போல் தானா உலகில்
மனித வாழ்க்கையும்?

## விடியல்

ஒவ்வொரு காலையும்
ஒளிவெள்ளத்துடன் விடிகின்றது
பெண்ணான என் வாழ்க்கை
எப்போது விடியும்?

## தாய்

பல சுமைகள் அதில்
பத்து மாத சுமையும்!
தனது உதிரத்தில் முத்தெடுத்தாள்!
அதை பேணியவளுக்கு
கிடைத்த இறுதி பரிசு
இழிவான வார்த்தைகளே

ஏ. நிரோஜினி
கலைப்பிரிவு
தி/சென் மேரிஸ் கல்லூரி
திருக்கோணமலை

# நான்கு கவிதைகள்

(1) தேய்ந்து உருகி
அழிந்து விட்ட
நிலவு கூட
துளிர்க்கையில்
இடம் பெயர்ந்து விட்ட
மனிதன் ஏன்
இன்னும் பிறந்த மண்
திரும்ப மறுக்கிறான்?
புதைந்திருக்கும் வெடிகளுக்கஞ்சியா
நாட்டை காடாக்கி
காவல் வைத்திருக்கும்
காக்கிச் சட்டைக்குப் பயந்தா?
இடிந்து உடைந்து சிதைந்த
உடமைகளை
கண்டு சகிக்க முடியாமலா?

(2) ''கண்டேன் ஓர் அழகியை
என் காதல் கண்களால்'' என்றாய்
யாரவள்? என்றதுமே
''அவள் ஒரு தேவதை''
என்றாய் இன்று
அவள் உன் காதலை
ஏற்க மறுத்ததும்
அவள் ஓர்
தாசி என்றாய்!

(3) புதிய கல்வி சீர் திருத்தமாம்!
இது ஒரு புதிய
கற்கை நெறியாம்!
அங்கு தேடல் தான்
கல்வியாம்!
தேடினேன் தேடினேன்
புதியதாய் எதுவும் காணேன்
மாறாக புத்தகங்களின்
தாள்கள் தான் தேய்ந்து போயின!

(4) கொடுத்த தாய்ப்பாலுக்கு
விலை பேசுகிறாயா - தாயே
திருமணம் என்னும் சந்தையில்
சீதனம் எனும் விலைபேசி
ஈன்றெடுத்த புதல்வனை
மாப்பிள்ளை என பெயர் சூட்டி
உண்மையில் அவனும் கூட
மாவினால் செய்த
ஒரு பொம்மை தான்

விலைபேசி விற்ற பின்னும்
வாழ விட்டாயா உன் மகனை
ஏன் உன் மனம்
இப்படிப் போகிறது?
நீயே
மருமகளை ஒடுக்கி வாழ்ந்தால்
பெண் விடுதலை கோருவதில்
என்ன அர்த்தம்?

எச்.எச். ஷிஃபானா
13வது வருடம் கலைப்பிரிவு
சென்மேரிஸ் கல்லூரி
திருக்கோணமலை.

# இழப்பின் நினைவலையில்

கடலலையின் சத்தத்திலும்
அவன் மனதில் நிசப்தம்
என்றோ ஒரு நாள்,
எப்போதோ பட்ட அடி
இப்போதும் வலிக்கின்றது
மறக்க முடியாத அந்த ரணங்கள்
இதயத்தின் ஓரத்தை தட்டிச் செல்ல
கண்களில் இருந்து கண்ணீர் முட்டிச் செல்கிறது
தாயை தந்தையை தமையனை
பறிகொடுத்த அந்த நாள்
இன்று நினைத்தாலும் - அவனுள்
ஓர் மனக்குமுறல்
கடலலையின் சிதறிய நீர்த்துளி
அவன் நினைவலையை சிதறடிக்க
தன் நிலை உணர்ந்து
நடந்தான் வீடு நோக்கி,
இழப்பின் சுமையோடு
எல்லாம் இழந்தவனாய்

றி:ப்காபானு .ஜே
(2004 கலைப்பிரிவு)
மெதடிஸ்த பெண்கள் கல்லூரி
திருக்கோணமலை.

# இடமாற்றம்

வானத்து பறவைகளுக்கும் இக்காலம்
ஓர் கொடிய காலமாயிற்று
ஏனென்றால் அவையும் இன்று
தப்பி ஓர் இடத்தில் வாழ்வது
கடினமாயிற்று

இன்று ஓர் இடம் - நாளை
வேறிடம், மறுநாள்....?
வெடித்தது வெடி
கும்பலான ஓலக் கூச்சல்
''புறப்படுங்கள்'' என்பது பதில்
எங்களுடன் பறவைகளும்
சேர்ந்து கொண்டன.

கப்பலும் தயாராக கரையை
தொட்டு கொண்டிருந்தது.
கப்பல் ஓடியது,! ஓடியது!
ஓடிக் கொண்டிருந்தது!
எங்கள் எண்ணங்களும் அதற்கு இணையாக
கப்பல் எந்த இடத்தில் நிற்கும்
என்ற கேள்வியின் பதிலை
நோக்கியே ஓடிக்கொண்டிருந்தன
எக்கரையில் நிற்கும் - இந்த
கப்பலும்; எமது இடமாற்றமும்?

இன்று
ஓடிக் களைத்த ஒருவரின் - முகத்தில்
களைப்பும் நிம்மதியும்
கலந்து தென்பட்டன
இந்த களைப்பு தொடருமா?
நிம்மதி தொடருமா?
பாரினில் நாம் பட்ட பாடுகள்
மீண்டும் எதிரொலிக்குமா?

கா. சுகனியா 2005 (கலைபிரிவு)
தி/பு/டி/பி/ச/ம/வி
திருக்கோணமலை.

## இன்னல்களின் எதிர்பார்ப்பு

காதை கிழிக்கும் வெடி ஓசை
ஓவென சனத்திரள் பதுங்கிய படி
குழந்தை பெரியோர் பேதமின்றி
நடுங்கியது எம் ஊர்

குழந்தையை நினைத்து தாயும்
தாயை நினைத்து குழந்தையும்
இட்டனர் கூக்குரல்
ஆழ்ந்தது எம் ஊர் கண்ணீர் வெள்ளத்தில்

எம் ஊரை விட்டு இடம் பெயர்ந்த மக்களுக்கு
இயற்கை கூட
துணையில்லாமல் மேகத் திரைக்குள்
மறைந்தது நிலவு

மண்ணில் மழை இல்லை
என்றிருந்த மக்களுக்கு
ஊர்முழுவதும் பெய்தது
குண்டு மழை!

வாகனம் வைத்திருந்தவர்
ஓடித் தப்பினர்
மீதிப்பேர் ஓட்டமும் நடையுமாக
களைத்து விழுந்தனர்.!

பசிக் கொடுமையால் - அழும்
குழந்தையின் முகம் பார்க்க
முடியாமல் தாய்படும் வேதனை
மேலிருந்து பார்க்கும் கடவுளுக்கு
விளங்குமா?

''ஏனம்மா என்னை ஈன்றாய்
ஈன்ற மகிழ்ச்சி இரு தினங்களில்
பறிக்கப்பட்டு விட்டதா?
என மழலை குழந்தை

பத்து மாதம்
உலகைக்காண
வயிற்றினுள் உருண்டு பிரண்டேன்
இப்போது ஊர்சுற்றும்
வாலிபனாக இடம் பெயர்கிறேன்!

றிஸ்வியா சுபைர்
தி/விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்
திருக்கோணமலை.

# சமாதான உலகில்

சமாதான உலகையே
சமைக்க விழையும் கரங்கள்!
அமைதி ஒன்றையே
அவசரமாக நாடும் மனங்கள்!

யுத்தக் கங்குல் சென்று மறைந்து
ரத்த வெறியில் துயரம் அகன்று?
ஆயுதக் குவியல் அனைத்தும் அழிந்து....

சாந்தி சமத்துவம்
சகோதரத்துவம்
ஏற்றி வாழ்வில்
ஏற்றம் பெறவே
எண்ணும் மானிடம்!

வல்லரசுப் போட்டி
வன்முறை அகன்ற
நல்லரசு ஒன்றை
நாடும் நெஞ்சங்கள்?

வெண்புறா வந்து
வேதம் உரைக்கும்
கண்விழித்தெழும் இனிக்
குருவிக் குஞ்சுகள்!
எத்திசை நோக்கி
எழுந்தவை பறக்கும்........

சிந்தனை புரட்சியைச்
செவ்வனே செய்யும்
நிந்தனை செய்யும்
நிற இனப்பிரிப்பை!

எழுந்தேர் கொண்டு
இதயமெல்லாம் உழும்!
அழுத்திச் சொல்லும்
''ஐக்கியம்'' என்றே!

அறநெறி இருக்கும்
அருள்வழி கிடைக்கும்
அமையும் புதிய
சமாதான உலகு

சு. றிஸ்வியா 2005 (கலைபிரிவு)
தி/வி//ம/வி
திருக்கோணமலை.

## ரோசாப்பூ

நல்ல நல்ல ரோசாப்பூ
நாங்கள் விரும்பும் ரோசாப்பூ
சிவப்பு நிற ரோசாப்பூ
சிரிக்கும் உள்ளம் கவரும் பூ

அழகழகான ரோசாப்பூ
அன்பைத் தரும் ரோசாப்பூ
உலவுந் தென்றல் காற்றுக்கு
ஓமென்று தலையாட்டும் பூ

தலையாட்டும் பூ இதனை
பிடுங்கித் தலையில் சூடுவதேன்
செடியின் தலையில் சிரித்தாலே
சிந்தை குளிர மாட்டாயோ

ஆ. விஜித்ரா
தரம் - 06
மு/கள்ளப்பாடு அ.த.க பாடசாலை
முல்லைத்தீவு

# அறிவுதரும் நூல்கள் அனைத்தும் கற்போம்

உயர்குடியில் பிறந்தவர் போல்
உத்தமமாய் வாழ்ந்திடுவோம்
உலக சிறப்புகள் பலவற்றை
பிழையற கற்றிடுவோம்

ஆயிரம் விடயங்கள்
நமக்குள் - நல்
அவசியமான அறிவை வளர்த்து
தேசங்கள் சீர்பெற நயத்தை சேர்ப்போம்.

கண்ணில் தெரியும் வண்ணப்பூக்கள்
கவிதை பாடி மயக்கும் வேளை
அறிவை பெருக்கும் ஆசான் போன்ற
நூல்கள் பலதை நாமும் கற்போம்

இதயம் நினைக்கும் கற்பனை சுவரை
விரைவில் மனதில் எழுதும் துணிவு
வருமே விரைவில் அடைய
படிப்போம் நூலை நாம் இன்று

பலவூர் வாழும் அறிஞர் கூட்டம்
பாவையரை எழுதும் கவிஞர் கூட்டம்
பக்குவமான பலவூர் செய்தி
அத்தனையும் பெற்று அடைவோம்.

நித்தம் நித்தம் நினைவு சுரக்க
புத்தம் புதிய கருத்துக்கள் மலர
சித்தம் தூய்மை பெறவே - இன்று
படிப்போம் பலவித கதை கவிதை!

பாரில் நடக்கும் புதிய செய்தி
நோயை தீர்க்கும் மருந்து சக்தி
சாலை நடக்கும் விபத்துகளோடு
பொது விடயங்களும் படித்திடலாமே

**பாத்திமா நஸ்ரீன்**
2005 (கலைபிரிவு)
தி/விவேகானந்தா ம/வி
திருக்கோணமலை.

# விடுதலைக்காய் சில வரிகள்

மானிடமே, விழித்தெழு
உன் உணர்வுகளை ஏன் இன்னும்
புதைத்து வைத்திருக்கிறாய்? அதை
எங்கே மறைத்து வைத்திருக்கிறாய்?

எத்தனை ஆண்டுகள் நீ
அடிமையாய் வாழுகிறாய் இந்த மண்ணில்?
எத்தனை உயிர்களை பலி கொடுத்துக் கொண்டிருக்கிறாய்
இந்த மண்ணில்?

ஐயோ!
மானிடம் ஒரு புனிதமென நினைத்து
கடவுள் படைத்தார்
அதற்கும் இத்தனை அவலங்களா?
தன் வினை தன்னை சுடுவது போல்
நீ ஏந்தும் துப்பாக்கி உன் இனத்தையே
பலிவாங்கும்.
இன்றே விட்டுவிடு பலிவாங்க வழிவகுக்கும்
எண்ணத்தை!

ஓ சமாதானமா
அதற்கும் இத்தனை இழுபறியா?
மனிதன் ஏங்குவது சமாதானத்திற்காய்
அந்த சமாதானத்தை சீரழிப்பது யுத்த பேரரசு!

பலிவாங்கும் எண்ணத்தை விட்டுவிடு - உன்
பண்பான நடத்தையை உலகுக்கு கற்றுக் கொடு - நீ
ஏழையாய் இருப்பது இறைசித்தம் - நீ சமாதானக்
கோழையாய் இருந்தால்
இன்னும் இந்த உலகில் யுத்தம்
மானிடனே!
நீ உண்ணும் உணவு உப்புக் கலந்ததா?
அப்படியானால் நீ உயிர் துடிப்புள்ளவர்
உணர்வுகளை கிளர்ந்தெழச் செய்பவன்

உன் ஆசைகளை அடக்கிக் கொண்டு
சிறகிழந்த பறவைபோல்
அடிமையாகி விடாதே

இனிமேலும் நீ உணர்ச்சி இன்றி உறங்கினால்
சமாதானமும் உணர்ச்சியின்றி உறங்கும்

சொல்லிவிட்டு செய்யாதே
செய்து விட்டு பதில் அனுப்பு
வழி மீது விழி வைக்கின்றேன் - உன்
வெற்றியின் விடுதலைக்காய்.

**டினுசியா கண்ணையன்**
மெதடிஸ்த மகளிர் கல்லூரி
திருக்கோணமலை.

## தாய்

பத்து மாதங்கள் - உன்
மடியினில் சுமந்தாய்
பதினேழு வருடங்கள் - உன்
மனத்தில் சுமந்தாய்

எனக்கு துன்பம் வந்த போது
உன் தூக்கத்தை மறந்தாய்
என் உண்ணும் உணவைக் கூட
துறந்தாய்

நான் இருக்கும் போது
சேர்ந்து இருக்கிறாய்
அழும் போது உடன்
அழுகின்றாய்

நீ செய்யும் இம் மகத்தான - பணிக்கு
ஏழு ஜென்மங்கள் உனக்கு
தொண்டுகள் செய்தாலும்
என் கடன் தீராது தாயே

***K*. தட்சாயினி**
2005 (கலைபிரிவு)
தி/விக்னேஸ்வர ம.வி.
திருக்கோணமலை.

# நினைவுச் சின்னம்

அன்று ராணுவ வீரனாய்
களத்தில் காலடி வைத்தேன்
கணத்தில்
என் கைகளில் இருந்த துப்பாக்கி
உன்ன மழை பொழிந்தது.

எங்கிருந்தோ வந்து
என்னை நினைவிழக்கச் செய்தது
என்ன வென்று தெரியவில்லை
மறுநிமிடம் எங்கோ நான்!

இரண்டு நாட்களாய்
இருட்டுலகில் நான்!
எல்லாமே மர்மம் போல்!
கண்விழித்துப் பார்த்தேன்.

என்னைச் சுற்றி
என் சொந்தங்கள் அழுத படியே
என்னவென்று தெரியாமலே
எதிர் நின்றோரை பார்த்தேன்.

சிறிது நேரத்தில் தான் புரிந்தது
என் கைகள் என்னிடத்தில் இல்லையென்று
என் நாடு எனக்களித்த
நினைவுச்சின்னம்
இந்தக் கையிழந்த
உடல் தான்!.

*N.* இந்திரா
2005 (கலைபிரிவு)
தி/விக்னேஸ்வர மகா வித்தியாலயம்
திருக்கோணமலை

# உறவுகளே வருக

உறவுகளே வருக
வன்னி மண் உறவுகளே வருக
மண்ணின் உறவுகளே - இந்த
வன்னியின் ஊடாக வருக!

உறவுகளே சற்று பேசுங்கள்
எங்களுடன் ஒரு கணம்
மனம் விட்டுப் பேசுங்கள்
அதுவே எமக்கு சந்தோசம்

வன்னி மண்பட்ட துன்பங்கள் பல
வன்னி மக்கள் பட்ட துன்பங்கள் பல
வன்னி மரங்கள் பட்ட துன்பங்கள் பல
இவை அனைத்தும் மறந்து விடுவோம்
உறவுகளின் பேச்சில் சிரிப்பில்
நிச்சயமாக மறந்து விடுவோம்.

வன்னி மண் பட்ட துன்பங்கள்
வார்த்தைகளில் வடிக்க முடியாது
வரிகளில் வடிக்க முடியாது
கவிகளில் வடிக்க முடியாது
காவியமாக வடிக்க முடியாது.

சற்று நில்லுங்கள் உறவுகளே
சற்று கேளுங்கள்
உங்கள் மனதில் எழும் உணர்வுகளை
உயிரிழப்புக்களுடன் மனம் விட்டு
உரையாடிச் செல்லுங்கள் அதுபோதும்.

**S. யூலியற் வசந்த குமாரி**
மு/கள்ளப்பாடு அ.த.க பாடசாலை
முல்லைத்தீவு

# அன்னை அருள்வாய்

ஏழ்மையிலே பிறந்து
ஏழ்மையிலே வளர்ந்து
அன்னையின் மடியினிலே
அன்னையின் வழி காட்டிலிலே
வீரத்தை நிலை நாட்டினேன்.

- அன்னையே

அன்னையின் பாசத்தினாலே
அன்னையின் வளர்ப்பினாலே
கண்ணும் கருத்துமாய்
கல்வியை ஊட்டினாய்
நல்லதையே கற்றோம்.

- அன்னையே

அன்னையின் அரவணைப்பினிலே
அன்னையின் கண்காணிப்பிலே
ஒழுக்கத்தைப் பெற்று
ஒழுக்கத்தைப் பேணி
ஒழுக்கமாய் வாழ்ந்திடுவோம்

- அன்னையே

கல்வியே சிறந்து விளங்கியே
கல்வியை கண்ணும் கருத்துமாகவே
கண்ணோடு கண் சேர்த்தே
கண்களால் பார்த்தே
அன்பினில் வேண்டி நின்றோம்.

- அன்னையே

செந்தமிழ் பேசிடவே
செவ்வானம் சிவந்திடவே
நாவிலே நலம் பரப்பியே
நல்லொளியுடனே
கள்ளமில்லாத உளளம் தருவாயே.

- அன்னையே

பல்கலைகளும் தருவாயே
பல்மொழியும் தருவாயே
ஔவையைப் போன்று பாடிடவே

ஒளவையைப்போன்று புகழ் பெறவே
வழிவகுப்பாயே
- அன்னையே

நல்லொளி தந்திடுவாயே
நல்லொளி பெருக்கிடுவாயே
நன்மைகள் செய்திடவே
நல்லவராய் வாழ்ந்திடவே
நல்வழி காட்டிடுவாயே. - அன்னையே

**இ. பிரதீபா**
தரம் - 10 கொக்குத்தொடுவாய்
அ.த.க பாடசாலை
நீராவிப்பிட்டி, முள்ளியவளை,
முல்லைத்தீவு

# புதியதோர் உலகம் படைப்போம்

மனிதம் மரிக்காத
மானிடராய் வாழ்வோம்
மங்காத புகழ்தரும்
வாழ்வதை அமைப்போம்

எந்த உயிரிலும்
அன்பு கொண்டிடில்
வந்திடாது பகைமை
வாழ்க்கைக்கு அது தேவை

போட்டி என்பது
உயர்வுக்குத் தேவை - அதில்
பொறாமை தவிர்த்திடில்
கிடைக்குமே மகிமை

***R.* துஷ்யந்தி**
தரம் - 08
மு/முல்லைத்தீவு றோ.க.த.க பாடசாலை
முல்லைத்தீவு

# சுடரும் சிறுவர்களே

சிட்டுக்குருவிகளாய் சிறகடிக்கும் சிறுவர்களே
சிந்தையில் நீங்கள் தீட்டுவதென்ன
வாழ்க்கைச் சித்திரமா?

குதித்துத் திரியும் சுட்டிக் குழந்தைகளே
குட்டிச் சுடர் விளக்குகளே நீங்கள்
கூடிக்கழிப்பது நாடகமா?

குழந்தைகளென்று குனிந்து விடாமல்
குதித்து எழும்புங்கள்! கூடி நில்லுங்கள்!
காலம் உங்கள் கைகளில் தான்....

**யோ.மேரி விஜியந்தி**
மு/முல்லைத்தீவு றோ.க.த.க பாடசாலை
முல்லைத்தீவு

# பெண்கள்

தென்றலாய்த் தான்
இருக்க வேண்டியதில்லை
தேவையாயின் புயலாகவும் மாறலாம்
மலராய்த் தான் இருக்க வேண்டியதில்லை
முள்ளாயும் மாறலாம்
நிலவாய்த்தான் இருக்க வேண்டியதில்லை
சூரியனாயும் மாறலாம்
மானாகத் தான் இருக்க வேண்டியதில்லை
புலியாகவும் மாறலாம்
மயிலாகத் தான் இருக்க வேண்டியதில்லை
கழுகாகவும் மாறலாம்
அடிமையாகத்தான் இருக்க வேண்டியதில்லை
ஆள்வோராகவும். மாறலாம்

**ச. மோகனறெஜினா**
மு/செம்மாலை மகா வித்தியாலயம்.
முல்லைத்தீவு

# பெண்ணே

ஏ.......பெண்ணே......
நீ ஒரு பாவை போன்றவள்
ஏன் இப்படி உணர்ச்சியற்றிருக்கிறாய்?
பொங்கி எழு.....
நீ சாதிக்க வேண்டியது நிறைய இருக்கிறது.
மற்றவர்களுக்கு அடிமையல்ல என உணர்த்து
எத்தனை எத்தனை சுமைகள் உன்மீது
அதையும் கவனி - ஆனால்
மற்றவர் குத்தக்குத்த தலை குனியாதே...
அது ஒரு பெண்ணுக்கு ஏற்படும் அவமானமென நினை

பெண்ணே எத்தனை காலங்கள் நீ இப்படி இருப்பது!
உனக்கு, உணர்வுகள் இல்லையா?
உணர்ச்சிகள் இல்லையா?
ஆசாபாசங்களில்லையா....?
போதும் நீ தலைகுனிந்து அடிமையாய் வாழ்ந்தது
உனது உணர்வு, விருப்பம், ஆசாபாசங்கள்
அனைத்தையும் வெளிப்படுத்து
போதும் நீ பொறுமையாய் இருந்தது
ஏ...... பெண்ணே நீ பொங்கி எழு

உலகம் மாறிவிட்டது
நீ ஏன் இன்னும் மாறவில்லை
போதும் இருட்டில் கிடந்தது
வெளியில் வந்து வெளிச்சத்தைப் பார்
அதிலுள்ள இன்பங்களை அனுபவி
பெண்ணாலும் முடியும் என நினை
பல சாதனைகள் புரி
பெண்ணே தலை குனிந்தது போதும்
எழுந்திரு.......
பொறுத்திருந்தது போதும் புறப்படு

**இ. கோசலியா**
2005 கலைப்பிரிவு
தி/உவர்மலை
விவேகானந்தா கல்லூரி

# இறைவா உன்னிடமொரு கேள்வி

இறைவா, உன்னிடமொரு கேள்வியப்பா
நம் நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்து விட்டது
- எனப் பலர் கூறினர்
நானோ கூறுகின்றேன்
- அது பொய்யென
இம்மண்ணின் சொந்தக்காரர் மானிடர்
மானிடர்க்கு வாழ இடமில்லையாம்
- இம்மண்ணிலே
காரணம், யுத்தமா? இல்லை, அடக்குமுறையா?
அவல மக்களின் குறைகள் - இந்நாட்டிலே
வெள்ளைத் தாளிலே வைக்கப்பட்ட ஒரு
- கரும்புள்ளியா?
கறுப்புத் தாளிலே வைக்கப்பட்ட ஒரு
- வெள்ளைப்புள்ளியா?
இறைவா, இது அகதியாகிய என்னால்,
உனக்காக விடப்பட்ட ஒரு கேள்வி.
சண்டைப் படைக்கள வண்டிகள் வந்தன
- சட்டெனவே
தண்டம் தடாம் என்றும்,
தாம் தீம் தடாம் என்றும்,
- சாய்ந்தனவே உயிர்கள்
கண்மணியைக் காணலயே!
கதிரவனும் மறைந்து விட்டான்
முன்னிரவுச் சந்திரனின்
முகம் பார்க்க முடியலயே!
கைவிளக்கை நூற்கும் காற்றில் - என்
கையோ நடுநடுங்க - என் செல்வத்தை
எங்கே போய் நான் தேடுவேன்
இறைவா! இது ஏழைத் தாயாகிய என்னால்
உனக்காக விடப்பட்ட ஒரு கேள்வி.
ஆடவருடன் பழக மனம் பதைபதைக்கிறது
ஆபத்தென எண்ணி பெண்மை விலகுகின்றது.
பெண்களுக்கு ஏனப்பா இந்த அவல நிலை
பத்திரிகையதை - நானும் பார்த்தேன்.

எந்தப் பக்கம் பார்த்தாலும்
பெண் அவலம்! பாலியல் வல்லுறவு
பிரம்மா! என்னைப் பெண்ணாகப் படைத்தது
- உன் குற்றமா
இறைவா! இது ஒரு பெண்ணாகிய என்னால்
உனக்காக விடப்பட்ட ஒரு கேள்வி.

**வதனி மகேந்திரராஜா**
2005 ''கலைப்பிரிவு''
தி/மெதடிஸ்த மகளிர் கல்லூரி
திருக்கோணமலை

# அவன் நினைத்திருந்தால்

அவன் நினைத்திருந்தால்
என் கூந்தலை கத்தரித்திருக்கலாம்
சூர்ப்பநகைபோல் ஆக்கியிருக்கலாம்
கண்களிடையே மிளகாய்த்தூளை தூவியிருக்கலாம்
என்னை அடித்திருக்கலாம் உதைத்திருக்கலாம்

ஏன் என்னை பட்டினியாய் கிடக்கச் செய்திருக்கலாம்
எனது பற்களை உடைத்திருக்கலாம்
கோடாலிகொண்டு என்னை கொத்தியிருக்கலாம்
உயிருடனேயே என்னை புதைத்திருக்கலாம்
சித்த பிரமைப் பிடித்தவள் என கேவலப்படுத்தியிருக்கலாம்.
கொலைகாரியென சிறைவாசம் அனுபவிக்கச் செய்திருக்கலாம்
பெற்றோல் ஊற்றி கொழுத்தியிருக்கலாம்
இது மட்டுமல்ல இன்னமும் செய்வான் நினைத்திருந்தால்
ஏனெனில் இவற்றையெல்லாம் செய்திருக்கலாம்
எனது கற்பை சந்தேகித்ததை விட.

**கோ. மேகலா**
தி/செல்வநாயகபுரம் ம.வி
திருக்கோணமலை

# ஓ .......... சமாதானமே

ஓ..... சமாதானமே
போர்வழி வம்சத்தின் எதிரியா நீ
உன்னை அழித்திட வரும்
புல்லர்கள் எத்தனை பேர்

போர்க் களத்தின் சவாலாய் - நீ
பொறுத்து இனியும் இருப்பது ஏன்?
மரணித்த மனிதர்கள் போதாதா?
விரைவில் நீ வந்திட மாட்டாயா?

நீ வருகின்ற பாதை
கள்ளமற்ற உன் வெள்ளை மனசுக்கு
தெரிந்திருந்தும் - நீ
வராது இருப்பதேன் - வழியல்
சில முட்புதர்கள் உண்டோ?
இக்கலியுக காலத்தில் யாரைத்தான் நம்புவது
பதட்டமின்றிப் பக்குவமாய் வருக. சமாதானமே!

**நா. ஜெய்குமாரி**
தி/கிளிவெட்டி. ம.வி.
கிளிவெட்டி
மூதூர்

# மலரே மலரே மலர்வாயே

மலரே மலரே மலர்வாயே
மாலையாய் உனையும் தொடுப்போமே
வாசனை வீசியே இருப்பாயே
வசந்தமே வாழ்வில் கொடுப்பாயே

மல்லிகை முல்லை சாமந்தியே
மலரவன் பாதம் பணிந்திடவே
கொள்ளை இன்பம் கொடுப்பாயே
கொண்டையில் சூடி மகிழ்வோமே.

மாதர் எல்லாம் விரும்பிடுவீர்
நாளெல்லாம் மலர்ந்திடுவாய்
சோலைகள் தோறும் நீ மலர்வாய்
சொந்தங்கள் கூடி வரவேற்போம்.

காவென்பார் பொழில் என்பார்
காற்றிலே வாசனையோடு ஆடிடுவாய்
வாழ்விலே எம்மையும் மகிழ வைப்பாய்
வாழ்த்துக்கள் கூறி வணங்கிடுவேன்.

*K.* **துஷ்யந்தினி**
தரம் - 07
தி/கிளிவெட்டி மகா வித்தியாலயம்.
கிளிவெட்டி

# ஒரு பட்டதாரி விவசாயி ஆகிறான்

தண்டச் சோறு இவனென்று
திட்டுகின்றார் தந்தை
பாவம் மகனென்று பரிகாசம்
செய்கின்றாள் அன்னை
இப்படித்தான் அண்ணனென்று
இரக்கப்படுகின்றாள் தங்கை
இத்தனையும் கண்டு இம்சைப்
படுகின்றான் ஓர் இளைஞன்

பட்டப் படிப்பை முடித்து
பட்டம் பெற்றான்.
இதனால் பயனென்ன இவனுக்கு?
விரக்தி கொண்டவனாய்
திரிகின்றான் சமூகத்தில்
''வெட்டிப்பயல்'' எனும் முத்திரையோடு

இலட்சம் கையில் இருந்தால்
கிடைக்கும் இவனுக்கோர் உத்தியோகம்
திறமைக்கு இங்கு முதலிடமில்லை
துணிச்சலையும் கைவிட்டான்
திரும்பிப் பார்க்கின்றான்
இவனோடு படித்துப் பெயிலானவன்
கோட் சூட்டோடு அலுவலகம்
செல்கின்றான்.

இவனை நோக்கி இவன் மனம்
ஏளனமாய் நகைக்கின்றது.
''நீ தண்டச் சோறு'' தான் என்று
நொந்து கொள்கின்றான்
''ராசி இல்லாதவன்'' என்று
கரைகின்றான் கண்ணீரில்
அவன் வெற்றியீட்டிப் பெற்ற
''சம்பியன் கப்'' அவன் நிலை கண்டு
கலங்கி நிற்கின்றது!
போட்டியில் பெற்ற சான்றிதழ்கள்
இவன் நிலையறிந்து சயனத்தில் ஆழ்ந்துள்ளன
தொழில் வாய்ப்பு தேடி
விண்ணப்பித்து விண்ணப்பித்து
கை சலித்துப் போனான்

உடைந்து! போன அவனுள்ளம் இனியும்
உத்தியோகத்தை எதிர்பார்க்கவில்லை
பரம்பரைத் தொழிலைக் காக்க புறப்படுகின்றான்
பட்டதாரி கூலிக்காரனான்!
ஒன்றுணர்க வாலிபனே
உடலுழைப்பு ஒன்றும் இழிந்ததல்ல
பெறுமதி மிக்கதாயதை மாற்றும்
பெருமை பெற்றுயருகவே.

யோ. சாந்தகுமார்
ஆண்டு - 10
கிளிவெட்டி மகாவித்தியாலயம்
மூதூர்

# சமாதானத்திற்காக

சோலையோரமும் கல்விச்சாலையோரமும்
கோயில் முன்னும் கோட்டை வாயில் முன்னும்
மலைகளின் சாரலிலும் வண்ணமேக ஒலி அசைவிலும்
சமாதானக் கூச்சலும் போஸ்டருமாம்
நாளை வருமோ உண்மைச் சமாதானம் என
ஏங்கி நிற்கின்றோம் நாம்

பழைய ஈழத்தேசத்தை புதிய ஈழமாக்குவோம்
அன்பு தேசமாய் உருவாக்குவோம்.
சமாதானம் தொடர நம் உணர்வினை ஊட்டி நிற்போம்.
தேசத்தில் பற்று வைத்து நம்மில் உள்ள
தோசங்களை களைந்திடுவோம்.
இன்பமாய் வாழவே நம் தேசத்திற்கு சமாதானத்தை
தொடர்ந்து வேண்டி நிற்போம்.
அகிம்சையை காப்போம் ஆனந்தமாய் வாழவே
தீபங்களை ஏற்றுவோம் சமாதான வாழ்க்கைக்கு
வெளிச்சம் ஊட்டுவோம்.
அன்பு என்னும் எண்ணெய் இட்டு அறிவு என்னும் திரி எடுத்து
பண்பு என்னும் சுடரை ஏற்றுவோம்.
இடர்கால இருளை அகற்றிடுவோம்
இனிய பண்பினால் இமயத்தை தொட முயலுவோம்.
நம் நாட்டின் முதுகெலும்பாய் நாமிருப்போம்.

உயிர்கள் வாழ வழிவகுப்போம்
கலைகள் வளர்ந்திடவும் இளமைக்காலங்கள் மலர்ந்திடவும்
நாமே கைகோர்த்து நிற்போம்.
சிறுவர்கள் இன்புறட்டும் இந்நாடே இன்புறுமே
சமாதான ஜாதியாய் இருப்போம். அன்பு எனும் மதமாய்
-ஒழுகுவோம்.

தமிழ் உயிர் சுவடிகளை புரட்டுவோம்.
இந்த சமுதாயத்திற்கு பெருமை சேர்த்திடுவோம்.

சமாதான சக்கரம் சுழலவே
நாமே அச்சாணியாக இருப்போம்.
எம்மை சமாதானத்திற்காகவும் அர்ப்பணிப்போம்.
அழிவுகளை நிறுத்துவோம்.
நம் இளைய தலைமுறையை வாழவைப்போம்
சமாதான அருவியிலே நாமும் குளித்திடுவோம்
நம் தாரக மந்திரமே சமாதானம் என்றாகி
சமாதானத்தில் ஒன்றாகுவோம்

**ப. தேவிதாசவ**
தி/மல்லிகைத்தீவு மகா வித்தியாலயம்.
மல்லிகைத்திவு
மூதூர்

# துன்பமே தூசு தான்

அகத்திலிருக்கும் துன்பங்களை
அறவே போக்க சிரியுங்கள்
முகத்தில் அதனைக் காட்டாமல்
முறுவல் செய்து மறந்திடுங்கள்
அகத்தில் இடர்கள் இருக்கும் வரை
இயன்றவரை தாங்கிடுங்கள்
சுகத்தில் நிலைக்க துன்பத்தை
தூசாய் நினையுங்கள் - சற்றே

வந்து சேரும் தவறெதற்கும்
வருத்தம் எதுவும் கொள்ளாமல்
பந்து போன்று வீசியதை - பக்கம்
வராமல் பாருங்கள்

நொந்து மனமும் சாயாமல்
யுத்தத்திற்கும் அஞ்சாமல்
மந்தப் போக்கை அகற்றிடுங்கள்
மாற உறுதி கொள்ளுங்கள்
என்றும் துன்பம் தூசேதான்

**முகம்மட் பாருக் சுகையிரா**
கலைப்பிரிவு - தரம் - (13) *B*
தி/அல் ஹிரா முஸ்லிம் மகளிர்
வித்தியாலயம்.
கிண்ணியா

# சிறுவர்களை பள்ளிக்கு அனுப்புங்கள் பணிக்கல்ல

வறுமை விளையாடும் நேரம்
சம்பிரதாயங்கள் சடங்காகும்
உழைப்பு உஷாராகும்
உலகம் பணத்தில் தான் விழிக்கின்றது
என்பது புரியும்

சமுதாயம் சின்னஞ் சிறார்களை
துன்ப சகதிக்குள் தள்ளும் - புத்தகம்
சுமக்கும் பிஞ்சுக் கரங்கள் - கடினம்
பதம் பார்க்கும் - இவர்களுக்காகவே
வறுமை படைக்கப்பட்டதா?
வறுமை படைப்பவர்கள் பெற்றவர்கள் தான்
நாம் வளமோடு வாழ்வதற்காய்

பெற்றவர்களின் வழிகாட்டலின்றி
மூட்டைகள் சுமந்து மூச்சு வாங்கி
மூச்சைக்காத்திட சிலுவைகள் சுமக்கப்படும்
சுமைகள் சுகமானதா - இவர்களுக்கு
பெற்றோருடன் பிள்ளை கூலிக்கு வேலை
காலம் முடிகிறவரை கஷ்டம்
சிலுவை சுமக்கும் சிறார்களின் - சுமைகள்
சிதறிப் போக பெற்றவர்கள் வழி - சொல்லின்
வறுமை நீங்கும் - சிறுவர்களை பள்ளிக்கு அனுப்புங்கள்
பணிக்கு அல்ல.

**முகம்மட் பாருக் சுகையிரா**
கலைப்பிரிவு - தரம் - (13)
தி/அல் ஹிரா முஸ்லிம் மகளிர்
வித்தியாலயம்.
கிண்ணியா

# எங்கள் தேசம்

புலர்வுக்காய்
பூபாளம் பாடும்
பூங்குயில்களின்
குரல் வளையை அறுக்கும்!

மனிதாபிமானத்தை
மதிக்காது
''முகமூடி'' களுக்கு
முன்னுரிமை வழங்கும்!

ஆண்டவர் திறன்
காட்டவும்
மாண்டவர் தொகை
கூட்டவும்
மண்டை ஓடுகள்
எலும்புகளை
அகழ்ந்து எடுக்கும்!

அடி வருடிகள்
நகர்களுக்கு
''சிம்மாசனம்''
அளிக்கும்!

போதி மரத்தையும்
போர்வையையும் காட்டி
தரணியை தாப்புக் காட்டும்!

கொள்ளையர்களால்
குமரிகள் - கற்பு
கொள்ளை போகும்!
குடியேற்றம்
என்ற பெயரில்
இனக் கொடி
ஏற்றும்!

பயிற்றும் ஆசிரியன்
பயிலும் மாணவியைப்
''பள்ளிக்கு'' அழைப்பான்!

எதிர் பார்ப்புக்கள்
ஏமாற்றங்களாக
மௌனமே
பாசையாகும்
ஆரவாரமற்று
பயந்து அடங்கி
''அடிமைகளாய்,
அகதிகளாய்,
மக்கள் வாழும்
'மதிப்பான' தேசம் இது

றிஸ்வியா
க/பொ/த (உ/த)
தி/அல் ஹிரா முஸ்லிம் மகளிர்
வித்தியாலயம்.
கிண்ணியா

# பெண் என்பவளுக்கு

வாடிய மலராய் அவள்
கோர்க்க நாரில்லை!
ஒளி துறந்த பௌர்ணமி
அவளை ஏற்க வானமில்லை!

வர்ணங்கள் தொலைந்த வானவில்லாய்
வெறுமையாய்ப் போனவளுள் அவள்

தென்றல் வந்து தீண்டாத நந்தவனமாய்
சோகங்களை சுமந்து கொண்டு
கழிகின்றன அவள் வாழ் நாட்கள்
எவராலும் நேசிக்கப்படாத வனிதை
வாசிக்கப்படாத கவிதை!

முதுமை இருளைத் தேடி
நகர்ந்து கொண்டிருக்கின்றது
அவள் யௌவனம்

நேற்றைய அவளது நம்பிக்கைகளும் கனவுகளும்
அவளது நரை மயிருடன் சேர்ந்து
உதிர்ந்து கொண்டிருக்கின்றன.........

இந்த நதியைக்
கடலோடு சேர விடாமல்
வரதட்சணையால் அணை கட்டும் ஆண்களே!
இன்று அவள் மூலையில் முடங்கிக் கிடப்பது
சமுதாயக் கண்களின் அசிங்கப் பார்வை
அவள் மேனியைத் துளைக்காமல்
இருப்பதற்கு மட்டுமல்ல...............

அவள் சுவாசித்து வெளியிடும்
கரியமில வாயு
உங்களைப் பொசுக்கி விடாமல்
இருக்கவும் தான்!

ஜ. சர்மிலா
கலைப்பிரிவு - தரம் - (13)
தி/அல்ஹிரா முஸ்லிம் மகளிர் வித்தியாலயம்.
கிண்ணியா - 02

# ஏழை மாணவியின் எளிய முகவரி

அந்திப் பொழுதுக்கும் அழகிய
நிலவுக்கும் கொண்டாட்டம்
ஏழை எனக்கோ! திண்டாட்டம்

ஆம்..........
நாட்கள் தான் நகர்கின்றன
வேட்கையின் விடிவு மட்டும்
புலரவே இல்லை

பதினொன்றில் படிக்கும்எனக்கு,
பதினாறு தான் வயசு
சின்னக் குடிசையில்
சின்னம்மா தான் புகலிடம்

நான்..........
அனாதை இல்லை என்பதை
அவள்தான், அர்த்தப்படுத்தினாள்.

வெள்ளாடை ஒன்று
வெளுத்துப் போனாலும்,
கழட்டியெறிந்து - விட
காலமும் கனியவில்லை

என்ன செய்ய..... நான்....
வகுப்பிலே முதல்தான்
முண்டம் மறைக்க
மறு ஆடைக்கு முனைந்தால்
பள்ளிப் படிப்பு பாதிதான்............
எத்தனை முறைகள்
சகபாடிகளின் - சீண்டல்
ஆசிரியரின் ஓரப்பார்வைகூட
என் ஆடையை மேயும்
மனிசங்களுக்கு - பிறர்
கறையைக் கண்டால்
களிப்புத்தானே!
பகட்டுக்காய் பகல் கனவில்
மிதப்பவர்களே!
அந்த வெண்ணிலா கூட
கறையுடன் தான்
கடமையைச் செய்கின்றது.

நவீன கல்வியில்
பிள்ளை இயல் ஆய்வு
பொய்த்து விட்டது போலும்.....
பெற்றவர்கள், இப்பாரில் இருந்தால்
இப்பாவிக்கு, இவ்வாடை மட்டும்
இருந்திருக்குமா?

இலவசக்கல்வி இனி
வியாபாரக் கல்வியானாலும்
விடமாட்டேன்
நெப்போலியனின்
நிலையை விடவா
ஆபிரகாம் லிங்கனின்
ஏழ்மையை விடவா?

ஏன்........
முஹம்மது நபியின்
முன்னிலையில்,
எந்நிலை, எம்மாத்திரம் இறைவா!
ஓலைக் குடிசையில் வாழும்,
ஏழையான எனக்கு
அறிவுக் கண்ணை மட்டும்
திறந்து விடு

உலகின்கண்ணை நானும்,
அகலத் திறந்து விடுகின்றேன்.

**ஏ.கே.ஹிழ்மியா,**
தரம் - 11
தி/வான் எல புஹாரி வித்தி
கிண்ணியா

# வெற்றியின் இரகசியம்

ஒருவன் வாழ்க்கையில் வெற்றி பெற
வேண்டுமானால்
நிச்சயமாகப் போராடினாலேதான் முடியும்.
போராட்டம் இல்லாமல் வெற்றியென்பது
இல்லை!
போட்டியில் கலந்து கொண்டால் தானே
வெற்றி பெற முடியும்?
போட்டியில் கலந்து கொள்ளாமல்
வெற்றி வாகை சூடுவது எப்படி?
வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமானால்
வாழ்க்கையை ஒரு சவாலாக
ஏற்றுக் கொள்ளவேண்டும்.
உன் வாழ்க்கையில் வெற்றி பெற
தடையாக இருக்கும் எதிரி யார்?
கண்ணுக்குத் தெரியாத
அதி பயங்கரமான எதிரி
வெளி உலகத்தில் இல்லை!
உன்னில்! உன் உள்ளத்தில் ஒளிந்து கொண்டு
உன் வாழ்வை சீரழித்துக் கொண்டிருக்கும் எதிரி!
உன் அமைதியை கெடுத்துக் கொண்டிருக்கும்.
அந்த எதிரியை இனம் கண்டு கொள்
அந்த எதிரி - உன்மனம்! உன் எண்ணங்கள்!
முதலில் அந்த அறியாமையை எதிர்த்துப் போரிடு
போரிட்டு விரட்டியடித்து விடு!
இந்தப் போராட்டங்கிளில் இருந்து
ஓய்வு பெற முடியாது!
ஓய்வு பெறவும் கூடாது!!

ஏனென்றால்,
நீ ஓய்வு பெறும் நேரத்தில்
அயர்ந்திருக்கும் நேரத்தில்
இந்த எதிரிகள் உன்னை வீழ்த்தி விடுவார்கள்!.
சோர்வுற்றிருக்கும் நேரம்
இந்த கண்ணுக்குத் தெரியாத எதிரிகள்
உன்னைத் தோற்கடித்து விடுவார்கள்
ஆகவே விழிப்பாகவும் இரு!
துணிந்து நில் ஓய்வின்றி
போராடிக் கொண்டேயிரு,
ஏனென்றால் வாழ்க்கை ஒரு போராட்டம்
அதில் வெற்றி பெறுவதில்தான்
வாழ்க்கை இனிக்கிறது.
வாழ்க்கையின் இலட்சியமே அதுதான்
வெற்றிக் களிப்பில் தான் வாழ்க்கை
பூரணத்துவம் அடைகிறது.
வெற்றி என்ற இலட்சியத்திலிருந்து
ஒரு படியும் கீழே இறங்கி விடாதே!
கண்ணுக்குத் தெரியாத இந்த எதிரிகளை
நீ வெற்றி கொண்டு விட்டால்
கண்ணுக்குத் தெரியும் எதிரிகள் என்று
யாரும் இருக்கப் போவதில்லை!
தாழ்ந்து தரமிழந்து தலைகுனிந்து
வாழ்வது, வாழ்க்கையே அல்ல!
அது ஜட வாழ்க்கை,
வாழ்க்கையில் வெற்றி பெற்றவனாய் நல்லவனாய்
வல்லவனாய்
தலை நிமிர்ந்து வாழ்வதே வாழ்க்கை!
அதுவே வெற்றியின் ரகசியம்.

*L.W.* லாஹிரா
12ம் வருடம்
குறிஞ்சாக்கேணி ம.ம.வி
கிண்ணியா

# என்னடா உலகமிது

உண்பதும் உடுப்பதும் ஊர்வலம் வருவதும்
உழைப்பே இன்றி ஊழல் புரிவதும்

பண்பது தொலைத்து பகைமையை விதைத்து
நாட்டைக் கெடுத்தது தான் மீதி!

மருத்துவ மனையில் பிறப்பதில் தொடங்கி
மயான ரதத்தில் ஊர்வது வரையில்

திருந்திட முடியாத் தீயவர் ஆக்கிய்
கையூட்டென்பது குருதியில் கலந்தது

சரித்திரம் சிரித்திட சாகசம் புரிந்து
சகலரும் நகைத்திட சுயநல வேட்டை

தரித்திரம் பிடித்த சில பேர் முடிவால்
நடக்குதம்மா இங்கு மானிட வேட்டை

பழிகளை பெருக்கிட சாதிகள் சங்கம்
இறைவன் படைத்த மதங்களில் எங்கும்

ஒளிர் விடும் நம் தேசம் இருளில் ஆழ்ந்தது

மக்களின் மனங்களில் சோகமே சூழ்ந்தது
என்னடா உலகமிது என்றேங்காமல்
துக்கமே போக்கத் துணிவு கொண்டிடுவோம்.

**அப்துல் ஹமீட் றிஸ்வானி**
கலைப்பிரிவு - தரம் - (13)
தி/அல் ஹிரா முஸ்லிம் மகளிர் வித்தியாலயம்.
கிண்ணியா

# சமாதானமே தந்திடுக

ஆண்டொன்று கடந்த பின்னர்
மீண்டுமொரு போர் ஓய்வு
அமைந்துள்ள புத்தாசை
சமாதான மேடை முயற்சி
சமரசம் பேசுவதற்குச்
சம்மதம் எனச் சொல்லும்
சமிக்ஞை அதுவாகும்
நேற்றைய நெடும் பொழுதில்
ஆட்சி பீடம் ஏறி வந்த
பேரினவாதிகள் போல்
பேச்சு வார்த்தை எனச் சொல்லி
பூச்சாண்டி காட்டாமல்
தமிழர் போல் தயை காட்டி
பயங்கரவாதி எனும்
பெயர் புனைந்த நிலை தளர்த்தி
தமிழ்ப் பெரும் தலைமகன்
தளர்த்தியுள்ள போர்ப் பொழுதில்
சுடு குழலின் அலை தவிப்பு
அடங்கியுள்ள இப் பொழுதில்
சமரசம் பேசி உரிமைகள் பேணும்
சமாதானம் தந்திடுக

**அப்துல் ஹமீட் றிஸ்வானி**
கலைப்பிரிவு - தரம் - (13)
தி/அல் ஹிரா முஸ்லிம் மகளிர் வித்தியாலயம்.
கிண்ணியா

# சொர்க்கமாய்த் தெரியும்

மனிதன்
வாழவேண்டும்
என நினைத்து பார்.

மண்ணில் யுத்தத்தை
நிறுத்த வேண்டும்
என சிந்தித்துப் பார்

பூசல்
நீங்க வேண்டும் என
அதற்காக
நாளும் உழைத்துப்பார்

அழுகுரல்கள்
ஒளிய வேண்டும்
என எண்ணிப்பார்

அகதி வாழ்க்கை
மறைய வேண்டும்
என உணர்ந்து பார்

அப்பாவி உயிர்கள்
பிழைக்க வேண்டும்
என நடந்து பார்

நாடும், வீடும், வாழ்க்கையும்
உனக்கு சொர்க்கமாய் தெரியும்

**கிருஷ்ணானந்த மூர்த்தி திலீபன்**
தரம் - *9A*
தி /கிளிவெட்டி மகா வித்தியாலயம்.
கிளிவெட்டி
மூதூர்

# புறப்படு வாலிபமே

நொந்து போன நினைவுகளோடு
என்னிதயம்
நெருப்பாய் எரிகிறது

கடந்து சென்ற காலங்கள்
கல்வியினை அர்த்தமற்றதாகவே
அஸ்தமனமாகிப் போயின
மனித வாழ்க்கையோ
விஷப்பற்களுடனேயே
இறந்து போயிற்று

உலகில் அதிகரிக்கும்
அட்டூழியங்கள் கண்டு
என் நெஞ்சம் கொதிக்கிறது!
மானிடம்
தொலைந்து போன தேசத்தில்
வாழ்கின்றாயென
உணர்வுகள் வலிக்கின்றன!

வாலிபமே
புதையுண்ட பிரபஞ்சம்
புத்துயிர் பெற்றிட
புதிய பாதை நோக்கி
புறப்படு!

இரைப்பைகளை நிரப்புகின்ற
மானிடர் இன்னும்
இதயங்களை நிரப்பவில்லை
மனித குற்றங்கள்
மண்ணை நிரப்பி விட்டன
அடுத்தவனின் அழுக்குகளைக்
கழுவிக் கழுவியே
ஊத்தையாகிக்கொண்டிருக்கும்
உள்ளங்களை - உன்
உன்னத இலட்சியங்களால்
சலவை செய்து
மரித்துப் போன
மனிதம் - மீண்டும் பிறப்பதற்கு
புதிய பாதையில் புறப்படு!

புறப்படு
உன் இதயத்தையும்
இறை உதவியையும்
எடுத்துக் கொண்டு
சமூகத்தின்
தொலைந்து போன
முகவரி தேடி.......
உன் பின்னால்
உலகம் வரும்.

**வை. அஸ்மியா**
தி/அல் ஹிரா முஸ்லிம்
மகளிர் வித்தியாலயம்.

# கல்வி

பயிலடி கல்வியைப் பயிலு
பைந்தமிழாலே கல்வி
பயிலு நன்றாய்ப் பயிலு
செந்தமிழ் தனிலே சிறிதும்
சேராப் பிறமொழிக் கலப்பு
சுதந்தரத் தமிழைப் பேசப்
பயிலு கல்வியைப் பயிலு
கல்வியை நன்றாய்ப் பயிலு

பொய்கையில் மலர்ந்த பூவில்
பொற்பதம் தாங்கி நிற்பாள்
கையிலே வீணை வைத்துக்
கலைகளை அள்ளித் தருவாள்
அன்னவள் சாயல் கொண்டாய்
அழகிடைத் தெய்வமன்றோ
பெற்றவர் பெருமை காணப்
பேணுதல் அதிகம் உண்டு

நன்நடை பணிவு வேண்டும்
நல்லறிவுயர்தல் வேண்டும்
கல்வியைக் கற்க வேண்டும்
புகழொடு வாழ்தல் வேண்டும்
பண்புறப் பழக வேண்டும்
மாபணி உயர வேண்டும்
பயிலு கல்வியைப் பயிலு
கல்வியை நன்றாய்ப் பயிலு

நற்பணி செய்தல் வேண்டும்
    நலிவுற்றோர்க் குதவுதல் வேண்டும்
பொற்புறக் கற்றல் வேண்டும்
    பொலிவுறத் திகழ்தல் வேண்டும்
நின் புகழ் நானிலத்து
    நிலை பெறச் செய்தல் வேண்டும்
வஞ்சகம் சூது போக்கி
    வாய்மை காத்திடுதல் வேண்டும்.

கல்வியால் எந்தன் கண்ணே
    கனி மொழி பேச வேண்டும்
கண்ணிய முள்ளோர் கண்டுன்
    கமலக்கை குவிய வேண்டும்
பூதலம் போற்றல் வேண்டும் இன்னா
    கூறாப் புகழுடன் வாழ்தல் வேண்டும்
பயிலடி கல்வியைப் பயிலு
    கல்வியை நன்றாய் பயிலு

பள்ளி என்னும் புலத்தினிலே
    கல்வி என்னும் பயிர் வளர்ப்போம்
கலையரசியின் இன்னருளாலே
    கலைகளின் உலகம் வாழும்
கல்வியாம் பயிர் வளர
    ஊக்கமெனும் உரமிடுவார்
கருணை மிக்க ஆசானாம்
    கசடற விளக்கம் தருகின்றார்

பள்ளி செல்லும் பாலகரே
    நன்றாய்ப் பயில்வீர் கல்வியினை
நன்றாய் வாழ்ந்திடுவீரே
    நாளை உலகம் உங்கள் கையில்

ஆ.பிரதீபா
தரம் - 10

# ஆலமரத்தின் சுயசரிதை

ஆலிலே பூவும் காயும்
அதிலொரு பழமும் உண்டால்
சாலவே பட்சி எல்லாம்
தன்குடி என்றே வாழும்
மதி மயக்கும் மாந்தரும்
வந்து களிப் புற்றார்கள்
வயது சிறு பாலகரும்
அனுபவ மிக்க முதியோரும்
வந்து களிப் புற்றார்கள்
சுட்டெரிக்கும் சூரியனின் வெம்மை
ஆலின் நிழலுக்கு அஞ்சியது
வாலிபர்கள் வந்து தேடி
வந்திருப்பார் கூட்டம்
கோடா கோடி
ஆலிலே ஆதி போனால்
அங்கு யார் வருவதுண்டு

**தி.சுஜிதரன்**
தரம் - 10
தி/சல்லி அம்மாள் மகா வித்தியாலயம்.
திருக்கோணமலை

# தமிழே எமக்கு நதிமூலம்

அனைத்துலகும் அரவணைக்க
ஆவலாய் இசைபாட
நர்த்தனமும் நாடகமும்
உயிர்பெற்றது உன்னததமிழாலே

பெற்றபுகழ் வளர்ந்தோங்க
வழிவழியாய் வாழ்த்துப்பெற
சைவமும் நாற்குரவர் மொழியும்
புத்துயிர் பெற்றது உன்னத தமிழாலே

எம் பண்பாட்டின் புகலிடமாய்
உயர் விழுமியத்தின் உறைவிடமாய்
விளங்கும் ஆய கலைகள் யாவும்
நிலைபெற்றது உன்னத தமிழாலே

காலங்களின் கண்ணாடியாய்
கலாச்சாரத்தின் ஊற்றுக் கண்களாய்
பிறப்பெடுக்கும் இலக்கியங்கள்
சாகாவரம் பெற்றது உன்னத தமிழாலே

கலைகளும் காலத்தின் நினைவுகளும்
சான்றோர் மொழிகளும்
தரணியில் நிலைபெறவே சான்று பகிர்ந்த
தமிழே எமக்கு நதி மூலம்

**நிருத்யா நல்லலிங்கம்**
தரம் - 11
தி /ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி
திருக்கோணமலைல

# வசந்தத்தின் வெள்ளோட்டம்

புயலில் குலைந்த சிறுகூடாய்ப்
போனது எங்கள் வாழ்வு - மது
வலையில் வீழ்ந்த மானுடரால்
நேரிடும் இந்தத் தாழ்வு

சிட்டாய்ப் பறந்த செல்வங்கள் எல்லாம்
பசியால் முடங்கும் மூலை - குடி
கெட்டது இந்தக் குடியால் இன்று
பட்டதோ மனிதர் மூளை

சந்தோஷப்பூ பூத்துக் காய்த்து
கனிகள் தந்தது அன்று - மது
வந்தே புகுந்தது வசந்தவாசல்
வாடிப்போனது இன்று

புகையில் கலந்த மனிதரின் வாழ்வு
புகையாய் ஒரு நாள் மாறும் - கொடிய
பகையாய் நோய்கள் வந்தே குடிபுக
பாதியில் உயிரும் போகும்

தானும் புகைந்து சமுதாயத்தின்
சந்தோஷங்களும் புதைந்து - வரும்
சந்ததி கூடப் புகைதல் வேண்டுமா?
சிந்திப்பாயா மனிதா!

இளமைக் காலம் நெருப்பாய் மாற
எஞ்சியிருப்பது என்ன - நீ
களிக்கும் புகையோ கல்லறைக்குன்னை
நடத்திடும் அறிவாய் மனிதா

ஒப்பியப் பூக்கள் மலரும் வேளை
மனிதப் பூக்கள் வாடும் - தின ம்
அபினும் கஞ்சா குடுவுமடித்து
மனிதம் புழுவாய் மாறும்
பற்றும் போதைக் கரங்கள் உன்னை
பாதகம் செய்யத்தூண்டும் - பணம்
வற்றும் வேளை படுகொலை வரையும்
பாவங்கள் புரிவாய் மனிதா

மண்ணில் தோன்றி மறையும் வரையும்
மானுடராகவே வாழ்வோம் - நம்
எண்ணம் சிறந்தால் எல்லாம் சிறக்கும்
எங்கும் ஒளி மயமாகும்.

நச்சு மரத்தின் விதையை நடுவூர்
நாட்டிடுவோரைத் தூற்றி - இனி
அச்சமற்ற நல்வாழ்வின் போக்கில்
அணியணியாய் நாம் திரள்வோம்

போதை துறந்த உலகம் வேண்டிப்
போரிடும் மனிதர் வாழ்வர் - படும்
வேதனையெல்லாம் போய்விடும் ஒரு நாள்
சாதனை நம் வசமாகும்.

**யா. கார்த்திகா**
தி /புனித மரியாள் கல்லூரி
திருக்கோணமலை.

# மனம் என்பது?

மனம் ஒரு குரங்கல்ல - அதில்
உன் நினைவுகள் பூமாலையுமல்ல
அது உன் ராஜாங்கம் - சிலநேரம்
உன் நினைவுகள் மகுடமாகலாம்

மனம் ஒரு மலர் - அதில்
நல்லதை நுகர் இனிமைகளைச்சுவை
உன் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள் - சுற்றும்
உலகை முற்றும் உணர்ந்து கொள்ளலாம்

மனம் ஒரு ஆலயம் - உன்
மனதினுள் மனிதாபிமானத்தைப் பதி
பிறர் மனதினுள் பதியைத் தேடு - இப்போது
நீ ஒரு ஞானி ஆகலாம்

மனம் ஒரு கணனி - நீ
இயக்காமல் அது இயங்காது
உன் இயக்கம் சரியாக இருந்தால் - உலகம்
உன்னை சரியாக இனங்காணும்.

**நிருத்யா நல்லலிங்கம்**
தரம் - 11
தி /ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி
திருக்கோணமலை

# ஏன் இந்த ஜீவன்?

நூல் இழந்து பட்டமதன் நிலையைப் போல,
நான் தினமும் நலிந்துருகி நிற்க, இந்த
நாள் முழுதும் வேதனையின் விம்பம் வந்து,
நெஞ்சத்திலே ரணங்களென துன்பமாக,
தேள் பட்ட உடலாக துடிக்கின்றேனே;
துள்ளிடும் பருவ்த்தில் கலக்கம்; வாழ்வை,
பாழாக்கி விட்டானே; படைத்தவன் தான்
படிப்பதற்கும் வழியில்லையே, ஜீவன் ஏனோ?

படிப்பதற்கு ஆசையுடன் நூல் விரித்தால்,
பக்கம் வந்து நின்றிடுவார்; எந்தன் தந்தை
பிடிப்புடனே படிப்பதனை பார்க்கத் தானோ?
பாவையென் அருகில் வந்தார் இல்லை இல்லை
குடிபோதை தடுமாற்றம் கண்மயக்கம்;
பக்கத்தில் வந்தமர்ந்து, வாய் புலம்பி
விடியும் வரை உளறுவதை என்ன சொல்ல?
வாலிபத்தில் களிப்பு இல்லை ஜீவன் ஏனோ?

நாளைக்கு செய்திடுவேன் என்று சொல்லி
நிம்மதியாய் வீடு வந்து பயிற்சிக் கொப்பி,
வேளைக்கே எடுத்திட்டு விளக்கைப் பார்த்தால்
விளக்கது எரிந்திடவோ எண்ணெய் இல்லை
காலையில் பிரம்படி கஸ்டம் தன்னை
குருவிடம் சொல்லிட மன்னிப்புண்டா
வாலையிளம் பருவத்தில் வறுமை காயம்
வாட்டிட ஏன் இந்த ஜீவன் தானோ?

முற்றத்து மல்லிகைப் பூவின் வாசம்
முழுவதாய் அன்னையின் அன்பில் வீசும்
உற்றவர் திசையெங்கும் நன்னிலையில்,
உறைவிடம் கொண்டு இருக்கிறார், எம் துயரில்
மற்றவர் இரங்குவர் ஆனால் சுற்றம்
மறந்துமே நோக்கிடார் திடீர் வசதி
பெற்றவர் அவர்தானே உண்ணும் வயதில்
பட்டினி பாவமே, இந்த ஜீவன் ஏனோ?

உடையினை கழுவுவோம் என்று போனால்
திடீரென மழை வரும் வைத்து விட்டு
விடையினை சுட்டிடும் அம்மாவிற்கு
உதவிட செல்லுவேன் காலக் கஸ்டம்
நடையினில் நனைந்து மெய் நடுங்கி வந்து,
தேயிலைச் சாயத்தில் உறக்கம் கொள்ள
கிடைத்திட்ட வாழ்க்கையும் தேவைதானா?
கடவுள் ஏன் இந்த ஜீவன் தானோ?

*K.* கௌரி
தரம் - 10
தி /சீனக்குடா தமிழ் வித்தியாலயம்
சீனக்குடா.
திருக்கோணமலை

# அன்பிற்கு ஏங்கும் முதுமை

முன்னவராய் வாழ்ந்து விட்ட
முதியவர் நாம் பேசுகிறோம்
சின்னவராய் உள்ளவரே
செவிமடுத்துக் கேட்டிடுவீர்
பின்னாளில் நீங்களும்தான்
எமைப்போல் முதியவர்தான்
அந்நாளை நீர் நினைத்து
இந்நாளில் வாழ்ந்திடுவீர்

பார்போற்ற நீர்வாழ
பாடுபட்ட பெற்றோரை
பரிகசித்துப் பைத்தியமாய்
பழிப்பதுவும் நன்றாமோ
நேர்மையுடன் நீர் வாழ
நித்தமும்
சீர் கொண்ட பெற்றவரை
சிந்தித்துப் பார்த்தீரா
வேர் எனவே இருந்தவரை
வெட்டி வீழ்த்தல் முறைதானோ

நன்மைக்காய் சில வார்த்தை
நயமாகச் சொல்ல வந்தால்
நக்கலாய்ப் பேசிடுவீர்
உண்மையைச் சொல்லவந்தால்
உபதேசம் வேண்டாமென்பீர்
முன்னோர்கள் வாழ்ந்து வந்த
முறைகளைச் சொல்ல வந்தால்
மூதேவிபோ என்று
மூலையிலே முடக்கிடுவீர்

விஞ்ஞான யுகம் இன்று
வீறு கொண்டு எழுந்ததனால்
பொய்யான போலிகளில்
புதையுண்டு போனீரா
மெய்ஞான அறிவு பெற்று
மேதினியில் நீங்கள் வாழ
மேனி இளைத்தவரை
மெய் வருந்த விடலாமோ
அஞ்ஞானிகள் போல் நீங்கள்
அவமதித்தல் அழகாமா

இத்தனைக்கும் உங்களிடம்
என்னதான் கேட்டு நின்றோம்
சொத்துக்கள் கேட்டோமா
சுகபோகம் கேட்டோமா
கொத்து மலர் போல்
கொள்ளை அன்பைத்தானே கேட்டோம்
வித்துக்கள் நீங்கள் என்றால்
விதைத்தவர்கள் நாங்கள் அன்றோ
முத்துக்களான நீங்கள்
முழுநிலவாய் விளங்கிடவே
முதியோர் எமைப் பேணிடுவீர்
முன்னுரிமை கொடுத்திடுவீர்.

**ஜெ. சுவர்ணமுகி**
தரம் - 13 கலை
தி /நிலாவெளி தமிழ் வித்தியாலயம்
திருக்கோணமலை

# யாரோடு நோகேன்!

இளவேனில் காலம்!
இராக்கோலம்!
இளமை வேட்கையால்
இதம் காண இனிமை கொண்டு
ரதமாய் விரைந்தேன்
அந்திவானம் தென்றல் நளினம்
அரங்கேறும் கடற்கரைக்கு!

கருமேகங்களின்
கனரக உரசல்
விண்ணிலுமா யுத்தம்!
அன்று தன் சுற்று வட்டம்
வலமிருந்து இடமா?
இடமிருந்து வலமா? - என்று
பூமிக்கே சந்தேகம்!
உறங்கிக் கிடந்த என் உளம்
ஆர்ப்பரிக்க,
அடங்கியிருந்த என்மனம் அலைபாய்ந்தது
மீண்டும்!!

சகாராக்களில் கூட
மடைதிறந்த குருதிப்புனல்
சந்தேகமில்லை!
அங்கேயும் இருதயங்களின்
'லப்டப்' ஆனால் விநாடிக்கு 90 முறை!
வேருடன் வெளியேறிய
எம்மவர் அறைகூவல்கள்!
இந்தோனேஷியாவிலிருந்து
இங்கே ஒலிக்கும்!
சுடச்சுட சூடுபிடிக்கும்
யுத்தம் ஒரு 'புரியாணி'
ஈரினக்கலப்பின் 'மசாலா'
சபிக்கப்பட்ட மலரின் குறியாய்
மகரந்த மணிகளின் புணர்தலுக்காய்
காத்திருப்பு!
குருவியின் மூக்குநுனி வியர்க்க
பாயும் புலியும், சீறும் பாம்பும்
படைநடுங்கிப் பரிதவித்த அவலம்!

பன்மைகள் ஒருமையாகின!
சாகியம் தனியனாகின!
முன்னிலை படர்க்கையாகின!
நாளை நேற்றாகியது!!
வாழ்வின் சுவடுகள்
உயிர்ப்புறுமா?

வினுஜா விஜயகுமார்
12 உயிரியல்
தி /புனித மரியாள் கல்லூரி
திருக்கோணமலை.